University of Jaffna
235.5
MAV
249717(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிச் சிறப்புமலர் 1976

UNIVERSITY OF JAFFNA LIBRARY

UNIVERSITY OF JAFFNA SRI LANKA

ARCHIVES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.5
MAV.



ARCHIVES
University of Jaffna
249717
Library
249717

நிர்மாணிக்கப் படவிருக்கும்

**வசந்த மண்டப உற்சவர் சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
249717
Donated by:-
Mr. & C. KULARATNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

# பதிப்புரை

பழமை, புதுமை, பொதுமை, பெருமை, நிறை மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் கண்கண்ட தெய்வமாக, அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான ஒளியாக, ஆணவச் செருக்கறுக்கும் ஆண்மைக்காரனாக, மனமாசகற்றும் மலைமருந்தாக, நொந்தார் நோயகற்றும், வைத்தியநாதனாக வேண்டும் வரமளிக்கும் வள்ளலாக ஆறுமுகப் பரஞ்சுடர் அருளாட்சி செலுத்துகின்றான்.

அருள் கொளிக்கும் இவ்வாலயத் திருப்பணிகள் நடைபெறும் இவ்வேளையில், சிறப்புப் பணியாக, அழகு, பொலிவு, கலை சிறந்த சித்திரத் திருச்சபை, உற்சவமூர்த்திகள் திருக்கோயிலாக அமைக்கத் திருவருள் கூடியுள்ளது, அப்பெருமான் முருகனின் அருளாடல்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலமைப்பின் காற்கோள் விழாவாக ஆயிரத்தெட்டு அடியவர் சங்குஸ்தாபனம் செய்யும் பெருவிழா இன்று நடைபெறுகிறது.

இதுவரையும், மன்னர் பெருமக்களும், பெருநிதிச் செல்வர்களும் செய்து வந்த இச் சிவபுண்ணிய கைங்கர்யத்தைச் சாதாரண குடிமக்கள் செய்யும் பேறுபெற வாய்ப்பளித்த மாவை ஆதீனத்தாரை உளமாரப் போற்றுகிறோம்.

இப்பெருவிழாவின் போது அடியார்கள், அன்பர்கள் யாவர்க்கும் மாவை முருகன் திருவருட் பிரசாதமாக இச்சிறப்புமலரை அளிக்கிறோம். மாவைப் பெருமானின் அருள்மாட்சி, உங்கள் சிந்தனையிற் கலந்து, பேரானந்தம் அளிக்க வேண்டும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவாவினுல் அப்பெருமானின் நிழற்படங்கள், அவைபற்றிய குறிப்புக்கள், அப்பெருமான் பற்றிய கட்டுரைகள், கருத்துரைகள், கவிதைகள் ஆகியவற்றைத் தாங்கி இம்மலர் வெளிவருகிறது.

புனிதமான இம்மலரை புனிதமான சிந்தனையுடன் வாங்கி, மாவைப் பெருமானின் திருப்பணிக்கு உதவுமாறு உங்களை உளமார வேண்டுகின்றோம்.

இச்சிறிய மலரைப் பரிமளிக்க, ஆசியுரை நல்கிய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ. சு. துரைசாமிக் குருக்கள், பிரதமகுரு வித்யா பூஷணம் சிவஸ்ரீ. து. சண்முகநாதக் குருக்கள், பிரபல தொழிலதிபர் சிவதர்ம வள்ளல். க. கனகராசா J. P. அவர்கட்கும் திருப்பணிகள் பற்றி உற்சவ காலத்தில் ஒலி நாடாவில் கருத்துரை வழங்கிய நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ. சுவாமிநாத தம்பிரான் சுவாமிகட்கும், கட்டுரை, கதை, குறிப்புக்கள், நிழற்படம் ஆகியவை தந்து உதவிய அறிஞர், கவிஞர், கலைஞர் பெருமக்கட்கும், நூல் அச்சிட நிதி உதவிய வைத்திய கலாநிதி. தி. இராஜேந்திரா, பிரபல தொழிலதிபர் திரு. தா. திருநாவுக்கரசு, சந்திரா அச்சக அதிபர் திரு. நா. செல்வநேசன் அவர்கட்கும், அழகாக அச்சிட்டுக் கொடுத்த அச்சக ஊழியர்க்கும் எம் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.


திருப்பணிகள் தொடங்கிய நாள்முதல் சிரமதானம் செய்து உதவியளிக்கும் (1) மாவைக் கந்தன் திருப்பணிச் சபையினர் (2) மாவைக் கந்தன் தொண்டர் சபையினர் (3) மாவிட்டபுரம் கிளை முன்னேற்றச் சங்கம், (4) எல்பிகெம் வாளித்தொழிற்சாலை — மாவிட்டபுரம், (5) வீமன்காமம் மகா வித்தியாலயம் (6) நடேஸ்வராக் கல்லூரி, (7) காங்கேசன்துறை மகா வித்தியாலயம், (8) பளை வீமன்காமம் க்ஷத்தியவத்தை கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றிற்கும், திருப்பணிகள் நடைபெற நிதியுதவி வழங்கிக் கொண்டிருக்கும் அடியார்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கம் ஆற்றும் சிரமதானத் திருப்பணிக்கு எம் நன்றிகள்.

**திருப்பணி மலர்க்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவை மூர்த்தங்கள் (1)**

# அறுமுகப் பரஞ்சுடர்

ஆதியாய், அநாதியாய், அன்பே வடிவாய், அழகே உருவாய், ஆனந்த அமுதமாய், அவனி வாழ் மக்கட்கெல்லாம், அருள் பாலிக்கும், மாவை வளர் அறுமுகப் பரஞ்சுடரின் நிழலுருவச் சித்திரத்தையே எதிர்ப் பக்கத்தில் பார்க்கிறோம். கருணைபொழி திருமுகங்களும், அழகிய மணி மகுடமும், அணிபணிகளேந்திய அகண்ட மார்பும், ஆயுதம் பல தாங்கிய பத்துக் கரங்களும், அபயவரதகரமிரண்டும், அவற்றில் தாங்கிய அழகிய வேலும், குக்குடக் கொடியும், சிறகு விரித்த சிக்கி வாகனமுமாய் காட்சிதரும், முழுதும் அழகிய மூர்த்தியையும், அவனருகே, மலர்மாலையணிந்த தோள்களும், முழுமதியன்ன வதனங்களும், தெய்வமொழித் திருவாயில் புன்னகையும், அணிபணிகள் பூண்ட திருமேனியும், சிலம்பணி திருவடிகளையுமுடைய தேவியர் இருவரையும் பார்க்கும் போது,

"பக்தித் திருமுகமாறுடன், பன்னிரு கைகளுமாய்த்
தித்தித்திருக்கும் திரு அமுது கண்டேன்"

என்ற அருணகிரியார் திருவாக்கு எம்முள்ளத்தில் வராமல் விடாது.

எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, எதையும் கடந்து, இப்பாலுக்கிப்பாலாய், அப்பாலுக்கப்பாலாய், அகில உலகமும், அளாவி நிற்கும் அறுமுகப் பரம்பொருளை கச்சியப்ப சுவாமிகள்,

"எங்கணும் திருவதனங்கள், எங்கணும் விழிகள்
எங்கணும் திருக் கேள்விகள், எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக் கழல்கள், எங்கணும் வடிவம்,
எங்கணும் செறிந்து அருள்செயும் அறுமுகத்திறைக்கே"

எனக் கந்தப் புராணத்தில் ஓர் விசுவரூப சித்திரமாக மிக நுட்பமாகக் காட்டுகிறார் இப்பரஞ்சுடர்.

"அயனெனவாகி, அரியெனவாகி, அறியொணாப் பொருளதுவாகி"
விளங்கித் "திசையாகி, அத்திசைக்கோர் தெய்வமாகி"

நான்கு திசைகளுடன், கீழ், மேல் ஆகிய ஆறு திசைகளிலும் வாழ்கின்ற மக்கட்கெல்லாம் அருள் சுரக்கும் ஐயனாக அறுமுகம் தாங்கி நிற்கிறான், இவ்வழகிய பெருமானைப் பார்த்தாலும், அவன் புகழ் கேட்டாலும், அவன் திருநாமம் ஓதினாலும் உள்ளமெல்லாம் தித்திக்கும் பேரானந்த அனுபவம் பெறலாம். தேறுமுகமில்லாத அடியார்க்கு, தன் அருள்பொலி ஆறுமுகங் காட்டி, அழகுபொலி உருக்காட்டி, தன் அழகாலும், அருளாலும், அவர்தம் பாவம் தடிந்து, பிறவித் தாபம் தணிக்கும் பேரருளாளனாக மாவைப் பதியில் திகழ்கிறான். இவ்வருள் மாட்சியைத் தானே, மாவை முருகன் மேல் ஆராத பக்திகொண்ட அடியவரொருவர்,

"தெய்வநிறை சந்நிதிச் செந்நின்று கைநீட்டித்
திருவருட் டிறங்க ளுன்னித்
தேயுமன மழியுமவர் செங்கைக்கு மெட்டுநீ"

என்று பாடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆலயக் கற்றூணில் கலையழகு

— அர்த்தநாரி

"ஒரு நாமம், ஒரு உருவம், இல்லாத" இறைவனை ஆயிரம் திருநாமமிட்டுப் பாடியும், பல மூர்த்தங்களாகக் கல்லாலும், சொல்லாலும், செம்பாலும், சுதையாலும், வடித்தெடுத்து வழிபாடு செய்தவர்கள் தமிழ்பெருங்குடி மக்கள். அழகொழுகு அற்புத வடிவங்களாக, அருள்பொலியுந் திருவுருவங்களாக. ஆனந்தத் தாண்டவமாடும் மூர்த்திகளாகக் கோரம், ரௌத்திரம் நிறைந்த கோலங்களாக, அமைத்து கலையழகு மிளிரச் செய்தவர்கள் தமிழ் நாட்டுச் சிற்பிகள். இவ்வதியற்புதத் தொன்மைக் கோலங்களில் மிகச் சிறந்தது அர்த்தநாரித் திருக்கோலம். உயிரணுக்கள் யாவற்றிலும் உள்ள ஆண், பெண் பகுதிகள் பின்னிக்கிடக்கும் பேரதிசயத்தை நுட்பமாகக் காட்டிவிடுகிறது இவ்வடிவம், ஒரு பாதி ஆணுகவும், மறுபாதி பெண்ணுகவும், சிவனும் சக்தியும், ஒன்றாய், உடனாய் பின்னிப்பிணைந்து நிற்கும் பேரழகு இவ்வர்த்தநாரி மூர்த்தம். இதன் இடப் பாகத்தில், சீவி முடித்துச் சிங்காரித்த சிகையும்; காதில் தோடும், விம்மும் தனமேந்திய மார்பும், வளை பூண்ட கரத்தில் கண்ணுடியும், சிற்றிடையும்; தண்டைக்கால் வரை சேலையும், சிலம்பும், செஞ்சாந்து பூசிய பஞ்சின் மெல்லடியும், அமைந்துள்ளது. இதன் வலப்பகுதியோ, கொன்றைவார் சடையும், செவியிற் சங்கக் குழையும், அரவாபரணமணி கையிற் சூலப் படையும், எடுப்பான வலிமைமிகு தோளும், பரந்த மார்பும், புலித்தோலாடையும், வீரக்கழல் அணி காலும் கொண்டுள்ளது. இவ் விரண்டு பாகங்களும், பொருந்தக் காட்சி தரும். அர்த்தநாரி பிறந்த கதையே சுவையானது! சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சேவிக்கும் வைராக்கிய சிவபக்தர் பிருங்கி முனிவர். சிவனை வழிபடும் போதெல்லாம், பிடிவாதத்துடன், அவனை மட்டும் வலம்வந்து, அன்னை பார்வதியை ஏறெடுத்தும் பாராது போகும் தன்மையுடையவர் இப் பிருங்கியார். இவர் செய்கையால் அதிருப்தியடைந்த அன்னை பார்வதி, சிவத்தின் ஆலோசனைப்படி, பிருங்கியாரின் தவவலிமையைச் சோதிக்க, ஈருருவும் ஒருருவாய், ஒரு சமயம் பிருங்கிக்கு காட்சி கொடுத்தார். பிருங்கியாரோ தமது வைராக்கிய தவவலிமையால் வண்டுருவாகி, சிவசக்தி வடிவத்தின் நடுப்பகுதியைத் துளைத்துச் சிவத்தை மட்டும் வலம்வந்து வழிபாடு செய்தார். இதனுல் தம் ஊன் உடலை நீங்கி, என்புருவில் என்றும் இறைவன் வலப்புறமிருந்து வழிபாடு செய்யும் வரத்தைப் பெற்றுர். இறைவனும் இறைவியும் ஒருங்குசேரவுள்ள இவ்வரிய திருவுருவத்தை,

"உண்ணுமுலை உமையாளொடும்
உடனுகிய ஒருவன்,
பெண்ணுகிய பெருமான்......... "

என ஞானசம்பந்தப் பெருமானும்,

"உமையாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர்
ஒற்றியூர் உறை உத்தமனே"

என அப்பர் சுவாமிகளும்,

"தோலும், துகிலும், குழையும், அருள்தோடும்
பால் வெள்ளை நீறும், பசுஞ்சாந்தும், பைங்கிளியும்
சூலமும், தொக்க வளையும், உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

என மணிவாசக அடிகளும், மனம்கசிந்து பாடி மகிழ்ந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

மாவை ஆதீனகர்த்தா

## சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

வேதமுதல்வா விளங்கு சுடர் வேலவனே
நாதங், கடந்துநின்ற நம்பனே — மாதவர்க
ளேத்துகின்ற மாவை யெழினகரில் வீற்றிருக்குங்
கார்த்திகைமைந் தாவென்னைநீ கா.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியை வியந்து கூறும் இக்கலியுகத்தில், கலியுகவரதன் முருகப் பெருமானின் அற்புதக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து சுவைத்து வர்ணிக்க சொல் ஆற்றல் படைத்திலோம் நாம். சத்திரசிகிச்சையில்லை. பூச்சு மருந்தில்லை. குன்மைநோய் தீர்த்தருள, தன் கருணைக் கண் பார்வையாலே உடல்நோயையும், உயிர்நோயையும் தீர்த்தான் முருகன்.

அவனின் பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருளுக்கும் ஏற்றவாறு அவன் வீற்றிருக்கும் கோயில் அமையவேண்டுமென்ற பேரவா நம் முன்னோரிடம் குடிகொண்டது. அதனால் அவர்கள் விரிவான திருப்பணியைத் தொடக்கிவைத்தார்கள். தொடர்ந்து அப்பணிகளைச் செய்வது நம் பிறவிக் கடன். அக்கடமையைச் செய்ய முற்பட்டபோதெல்லாம் வரவேற்று முகமலர்ச்சியுடன் உதவிபுரிந்த அன்பர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

எம்பெருமான் கோயில் திருப்பணியை அங்கம் அங்கமாகச் செய்வது உசிதமானது. இதுவரை திட்டமிட்டு பூர்த்தி செய்யப்பட்ட திருப்பணிகள் சிறப்பாக அமைய அவன் கருணை துணைநின்றது.

வசந்தமண்டபத் திருப்பணி ஆரம்பிக்கப்படுகிறது. அதற்கென ஒரு திருப்பணிச்சபையும் உழைத்து வருகிறது. இத்திருப்பணி அடுத்த ஆண்டு மகோற்சவ தினங்களுக்கு முன்னரே பூர்த்தியாக வேண்டியது அவசியம். ஆகவே இத்திருப்பணிக்கு இலங்கைவாழ் சைவமக்கள் அனைவரையும் உதவி புரியும்படி வேண்டுகிறேன்.

திருப்பணிச் சபையாரின் நன்முயற்சி சிறப்பாக அமையவேண்டுமென ஆசீர்வதிக்கிறேன். திருப்பணிக்காக சரீரத்தாலும், உள்ளத்தாலும், பொருளாலும் உதவிவரும் பெருமக்களையும் ஆசீர்வதிக்கிறேன்.

திருப்பணிச் சிறப்புமலரில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், கருத்துக்கள் எல்லோருக்கும் தெளிவான புதுமைகளை ஊட்டும் என்பது என் எண்ணம். இம்மலர் நற்பயன் தருவதாக.

முருகன் கோயில் கொண்டருளியிருக்கும் மாவைப் பதியைச் சிறப்பாக அமைக்க கந்தப்பெருமானே முன்னின்று வழிகாட்ட வேண்டுமென அவன் தாளை ஏற்றுகின்றேன்.

**சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள்**

மாவையாதீனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிவாகம வித்யாபூஷணம்'

## பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
### அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

மாமகளும் நாமகளும் மகிழ்ந்து வீற்றிருந்தோர் பிரதேசம்; அங்கு அந்தணர்கள் ஓதும் வேத ஒலியும், யாகஞ் செய்வோரது ஒலியும் அவியேற்கவந்து ஆசிகள் கூறியோர் ஒலியும் ஒன்றாக சேர்ந்து மூவுலகும் கேட்கக் கூடியதாக முழங்கியதாம். இது மட்டுமா, வீதிகள் எல்லாம் சரியை வழி ஒழுகுவோர் ஒரு பாலிலும், யோகஞ் செய்வோர் ஒரு பாலிலும், நிட்டை கூடும் ஞானிகளும் ஞான நூல்கள் ஓதி தத்துவ விசாரஞ் செய்வோர் இன்னோர் பாலிலும் இருந்தனராம். இத்தகைமைகள் பொருந்திய அப்பிரதேசம் ஏழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஈழநாட்டின் வடபால் இருந்ததாகப் புராணங்கள் இயம்புகின்றன. அப் பிரதேசம்தான் வேல்முருகன் புகழ்விளங்கும் - நீழ்பெருங்கோவிலை தன்னகத்தே கொண்டுள்ள மாருதப்புரவல்லியின் ''மாவிட்டபுரம்'' ஆகும்.

ஞாலமெலாம் அருள் சுரந்து தர்மங்களை நிலைநிறுத்தி உயிர்கள் யாவற்றையும் இரட்சித்த எம்பெருமானது ஆலயம், மிலேச்சர்களால் பாழாக்கப்பட்டது. பின்னர் புண்ணிய சீலர்களால் புதிதாக்கப்பட்டு இன்றையவரையில் சீர் செய்யப்பட்டு வருகின்றது. இன்று ஐம்புலன்களை ஒன்றாக்கி ஷண்முகப்பெருமானது திருப்பாத மலர்களில் எம்மை இணைக்கும் சக்திவாய்ந்த இலட்சார்ச்சனைகளும், முக்தியின்பத்தை முறையாக பெறக்கூடியதான ஆற்றலைத் தரக்கூடிய மகோற்சவங்களும், இவற்றை பெறும் மார்க்கத்தை அறியக்கூடியதான ஞானோபதேசங்களும் அபரிமிதமாக இடம்பெறும் இத்திவ்விய ஷேத்திரத்தில் ஏழாம் நூற்றாண்டில் காணப்பட்ட செல்வங்களை மீண்டும் நிலைநிறுத்த வேண்டி அதற்கான புனர்வுத்தாரணங்கள் இடம்பெறும் இவ்வேளையில் சைவ மக்கள் யாபேரும் ஒன்றிணைந்து தத்தம் சக்திக்கேற்ற தானதர்மங்களையும், நன்கொடைகளையும் திரும்பத்திரும்பக் கொடுத்து மாவையெம்பெருமானின் திருவருளுக்காளாகுமாறு இத்தால் அழைக்கின்றேன்.

மாவையாதீனம்,
கலி. ரு எ து
அநளஹு ஐப்பசி க.

**பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



"சிவநெறிப் புரவலர்"

"சிவதர்ம வள்ளல்" "சிவதர்மபூபதி"

**திரு. க. கனகராசா ஜே. பி. அவர்கள்**

உரிமையாளர்: மில்க்வைற் சோப் தொழிற்சாலை

வழங்கிய

# ஆசியுரை

காங்கேயன்துறை என்றும், கோயிற்கடவை என்றும், மாவிட்டபுரம் என்றும் மகிமை பெருமை அற்புதங்கள் நிலவும் வகையில் மாநிலத்துக்கு அருள்புரியும் கலியுகவரதனுகிய மாவிட்டபுரக் கந்தன் ஆலயத்துக்குத் திருப்பணிச் சபையார் செய்து வருகின்ற மகத்தான தொண்டு மக்கள் மனத்தைத் தொடுவதாக. மக்கள் தாமே மனமுவந்து பெருநிதியும், பொருளும் உதவுவார்களாக. வசந்தமண்டபம் வெகு விரைவில் நிறைவேறும் வண்ணம் வள்ளி தேவசேனு சமேத சுப்ரமண்ய பெருமான் திருவருள் பாலிப்பாராக.

"திருஆலவாய்"
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
14-10-76

**க. கனகராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொங்கார வேலையில் வேலைவிட்டோன் அருள்போல் உதவ
எங்காயினும் வரும், ஏற்பவர்க்கு இட்டது''

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிகள் பற்றி ஆற்றிய உரை

உலகத்திலே எல்லாப் பணிகளுக்கும் மேலான பணி அருட்பணி. இந்த அருட்பணியை எவ்வாறு நாம் செய்யலாம் எனச் சிந்தித்தால் இறைவனுக்கு நம்முடைய பணிகளையெல்லாம் அர்ப்பணிக்கும் மேலான பணியே திருப்பணி என்று கூறலாம். கோயில்களை நிர்மாணிப்பதற்கு செய்யப்படுகின்ற பணிக்குத்தான் 'திரு' என்ற சொல்லை வைத்துத் ''திருப்பணி'' என்று சொல்கிறார்கள். வேறு எந்தப் பணிக்கும் 'திருப்பணி' என்ற சொல்லால் கூறப்படுவதை நாம் காண முடியாது. ஆகவே, ஆலயங்களை இருவகையாகப் பிரித்து, மன்னர்கள் வாழுகின்ற இடத்தையும், ஆண்டவன் வாழுகின்ற இடத்தையும் அரண்மனையாகவும் அரன் மனையாகவும் பெரியோர்கள் கூறுவார்கள். அரன்மனைகள் என்றும் இருக்கின்றன ஆனால் அரண்மனைகள் யாவும் அழிந்து விட்டன. மன்னர்கள் அழிந்தார்கள். அவர்கள் வாழ்ந்த அரண்மனைகள் எல்லாம் தரைமட்டமாகி விட்டன. ஆனால் மன்னர்களுடைய பெயரை உலகத்திலே பறைசாற்றும் நிலையில் இருப்பவை அரன் மனைகள் தாம். அவர்கள் கட்டி எழுப்பிய வானளாவுங் கோபுரங்கள், கலைக் கோவில்கள், ஆண்டவனுக்காக அவர்கள் செலவழித்த சிறந்த செல்வங்கள்தான், அவர்கள் புகழையும் அவர்களுடைய வாழ்வையும், அவர்களுடைய பெயரையும், இன்றும் நிலைநாட்டிக் கொண்டிருப்பதை நம் கண்கூடாகக் காணலாம். தஞ்சைப்பெரிய கோயில் இன்று உலகப் பிரசித்தி பெற்றதாகத் திகழ்கின்றது. ராஜராஜசோழன் இறந்துவிட்டான். அவனுடைய அரண்மனை இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டது. ஆனால் அவன் பெயர் இன்றும் உலகத்தில் நிலைபெறுவதற்குக் காரணம் அவன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில். அங்குள்ள சிற்பச் சிறப்புக்கள், அங்குள்ள கலை வடிவங்கள் எம்பெருமானுக்கு எழுப்பியுள்ள ஆலயம், இவையெல்லாம் எத்தனையோ வெளிநாட்டி நிபுணர்கள் வந்து ஆச்சரியப்படும் வகையில் அமைந்திருப்பதை நாம் காணலாம். ஆகவே, பொருளெல்லாம் இன்று இருந்து நாளை சென்று விடும். அந்தப் பொருளை நாம் அருள்வழியிலே செலவு செய்தால், அது இம்மைக்கும், மறுமைக்கும், அம்மைக்கும் உபயோகப்படுகின்றது என்பதை நாம் தொன்று தொட்டுப் பல இடங்களிலே காண்கிறோம். 'கோயில்' என்ற சொல்லிலே 'கோ' என்றால் தலைவன் 'இல்' என்றால், இருக்குமிடம். ஆகவே, 'கோயில்' என்று சொல்கின்ற போது, எங்களுடைய தலைவனாக இருக்கின்ற எம்பெருமான் இருக்கின்ற இடமாகிறது. இப்பேற்பட்ட சிறந்த இடங்கட்குச் செய்யப்படுகின்ற பணிதான் 'திருப்பணி". மாவைக் கந்தனுக்கு இப்பொழுது மிக அருமையான திருப்பணி நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. முருகப் பெருமானின் பேரருளைப் பெறுவதற்கு மக்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே,

''பொங்குங் கடல் சூழுலகில், பொருள் தேடிப் புதைத்து வைத்து,
மங்கையர்க்கும், மக்களுக்கும், அணிபணிகள், ஆளவைத்து
கண்குளிரக் காண்பதெல்லாங் கனவாய்ப் பிணமாகும்போது
அங்கிதனுல் ஏது பயன்?''

என்று ஓர் பெரியார் கேட்கின்ருர். தேடுகின்ற பொருட்கள், அணிமணிகள், இந்த உடம்பு, யாவும் மெய்யென்று சொன்னுலும், இது ஒரு நாள் பொய்யாகப் போகின்றது. ஆகவே அங்கிதனுல் என்ன பயன் என்ற கேள்வியைப் போடுகின்ற நேரத்திலே — அங்கு இதனுல் என்னபயன் என்ற கேள்வியையும் போடுகின்ருர். ஆகவே, நம்முடைய உடம்புக்குச் செய்கின்ற அழகு, நம்முடைய தேகத்திற்குச் செய்கின்ற அழகு, எல்லாம் நிலையில்லை. 'யாக்கை நிலையாமை', 'செல்வம் நிலையாமை', இவை இரண்டையும் உணர்ந்த பெரியோர்கள், இந்த யாக்கையும், செல்வமும் நிலையற்றது என அறிந்து, உண்மையான மெய்பொருள் எது என்பதைத் தேடித்தம்மை ஆண்டவனுக்கு அர்ப்பணித்தார்கள். திருப்பணிகள் செய்வது பெருத்த புண்ணியம் என்று பெரியோர்கள் கண்டு அந்தத் திருப்பணியிலே தங்கள் பொருளையெல்லாம் ஈடுபடுத்திஞர்கள். ஒருவன் தேடுகின்ற செல்வம் பற்றி

''அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதேன்''

என்று அருணகிரியார் தம் 'கந்தரனுபூதியில்'' கூறுகின்ருர். மேலும்

''திணியான மனேசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ''

என்றும் கேட்கிருர். 'அகம்' என்றும் 'மாடு' என்றும் (மாடு என்ருல் செல்வம்) என்னுள்ளம் தியங்கிக்கொண்டிருக்கின்றதே, இதையெல்லாம் நான் உனக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும்'' என்று அவர் கேட்கின்ருர்.

ஆகவே, முருகனுடைய ஓர் சிறந்த ஆலயமும், எமது நாட்டிலே முருகப் பெருமானுக்குச் சிறந்த கேந்திரமாக அமைந்திருக்கின்றதுமான, மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் அருமையான கலைக்கோவிலாக மிளிர்வதற்கு, மண்டபங்கள் சிறந்த முறையிலமையவும், மக்களாகிய நாம், எம் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கின்ற பேரன்பு வெள்ளத்தில் திளைத்தோர்களாகி நம்முடைய மனத்தைத் திறந்து ஏராளமான பணத்தை அத்திருப்பணிக்குக் கொடுத்து, எம்முடைய பொருட்கள் யாவற்றையும் அருள் வழிக்குச் செலவிட்டு, இவ்வாலயத் திருப்பணியிலீடுபட்டு, அந்த அறப்பணியிலே எம்முடைய உள்ளத்தைச் செலுத்த வேண்டும் என்பதை நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டும். இங்கே நாம் ஒன்றைச் சிந்திப்பதற்கு ஆளாகின்ருேம். அறப்பணி என்ன என்று சிந்தித்தால், தர்மத்தின் வழியிலே, செலவழிக்கின்ற இடத்திலே, செலவழித்தால், அதை முருகன் எங்கேயாவது கொடுப்பான் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன.

''பொங்கார வேலையில் வேலைவிட்டோன்
அருள் போல் உதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது''

என்று கூறுகின்ருர் அருணகிரிநாதர். முருகனுக்காகவோ, அல்லது வேறு எந்தத் தெய்வத்திற்காகவோ நாம் செலவு செய்யும் பொருட்களெல்லாம், எங்காயினும் வரும், எந்த இடத்திலாவது கண்டிப்பாக வரும் என்று சொல்லப்படுகின்றது. '' ஏற்பவர்க்கு இட்ட பொருள், எங்காயினும் வரும்'' என்று சொன்னுல், நமக்கு வாழ்வு கொடுத்தவன் முருகன் நமக்குத் துணையாக உள்ளவன் முருகன், நம்முடைய வாழ்வு தாழ்வுபடாமல் வைத்திருப்பவன் முருகன், அவனுடைய சிறந்த ஆலயத்திற்கு, தர்ம கைங்கர்யத்துக்கு கொடுக்கின்ற பொருட்கள், எப்படி நமக்கு வரும் என்று நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க வேண்டும். பெரியபுராணம் இதற்குச் சான்று கூறுகிறது. தர்மத்திற்காகச் செலவிடப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் ஒன்று — இரண்டாகப் பெருகிவரும் என்பதைக் காரைக்காலம்மையார் சரித்திரத்திலே நாம் காணலாம். ஒரு சிவனடியார்க்குத் தர்மம் செய்த ஒரு மாம்பழம் ஆண்டவனிடத்திருந்து இரண்டாகப் பெருகியதை நாம் காணலாம். கண்ண பரமாத்மாவிற்கு உதவிய, ஒரு முழத்துண்டு பாஞ்சாலிக்குத் தன்மானங்கர்க்கக் கோடி கோடியாகப் பெருகியதைக் காண்கிறோம். இதையே அருணகிரியார் தம்முடைய பாடலிலே சொல்லுகிறார். "பொங்கார வேலையில் வேலை விட்டோனருள் போல் உதவ எங்காயினும் வரும், ஏற்பவர்க்கிட்டது" நிச்சயமாக ஏற்பவர்க்கு இட்ட தர்மம் நம்மைத் தலைகாக்க ஓடிவரும் அப்படிக் கொடுக்காமல் இருப்பவர்க்கும் ஒரு சூடு போடுகிறார் அருணகிரியார்.

" .. இடாமல் வைத்த
வங்காரமும், உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காதமோ?............"

என்று ஒரு கேள்வியையுங் கேட்கிறார். இப்படியான நல்ல காரியங்களுக்கு வைத்துக் கொண்டு கொடுக்காமல் இருப்பவற்குச் சொல்லுகிறார், அதாவது நிறைய வைத்துக்கொண்டு கொடுப்பதற்கு மனமில்லாதவர்க்கும்

" ......இடாமல் வைத்த
வங்காரமும் உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காதமோ? ... ..."

என்று கேட்டுவிட்டு ஒரு திட்டும் திட்டுகிறார்.

"கெடுவீர்! உயிர்போம் அத்தனிவழிக்கே" என்று கூறிவிடுகிறார். இன்னுமொருமுறை அப்பாடல் முழுவதையும் பார்ப்போம்

"பொங்கார வேலையில் வேலைவிட்
டோன் அருள்போல் உதவ
எங்காயினும் வரும், ஏற்பவர்க்கு
இட்டது; இடாமல் வைத்த
வங்காரமும் உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காதமோ கெடுவீர்! உயிர்
போம் அத்தனிவழிக்கே!"

அருணகிரிநாதர் தர்மத்தைப் பற்றிச் சொல்லும்போது மடந்தையர், வீடு, இவையெல்லாம் நிலையானவையில்லை. அவையெல்லாம் நமக்குத் துணையில்லை, ஆகவே, நாம் செய்கின்ற தர்மம் அறப்பணிகள்தாம் என்கிறார். அவை முருகன் அருள்போல எங்கு இருந்தாலும் எமக்கு உதவும் என்பது அருணகிரியார் திருவாக்கு. நாம் செய்யப் போகின்ற தர்மம் எத்தகைய தர்மம் என்பதைச் சிந்திக்க வேண்டும். பல தர்மங்களிலே உயர்ந்தது சிவதர்மம். சிவதர்மம் என்பது ஆலயங்களுக்காக, அரனுக்காக, இறைவனுக்காகச் செய்யப்படுகின்ற தர்மம்.

இறைவன் தான் நமக்குப் பொருள்
கொடுத்தான்
இறைவன் தான் நமக்கு உயிர் கொடுத்தான்
இறைவன் தான் நமக்கு வாழ்வு கொடுத்தான்

ஆகவே. நம்முடைய வாழ்வை வகுத்தவன் அவன். வள்ளுவர் சொல்லுகின்றார்

"வகுத்தான் வகுத்த வழியல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது" என்று

நாம் இவ்வுலகத்திலே சம்பாதித்த அத்தனையும் அனுபவிக்கப் போகிறோமோ? என்றொரு கேள்வியையும் அவன் நமக்குக் கிளப்புகிறான் எவ்வளவுதான் நாம் சம்பாதித்தாலும், எம்மோடு நாம் சம்பாதித்த பொருள் வரப்போகிறதா? என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு ஒரு முடிவுரையையும் அவனே சொல்லுகிறான்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்று சொன்னவன் கடைசியிலே இவ்வுலகைவிட்டு இன்னொரு உலகிற்கு நாம் போகப்போகிறோமே. அவ்வுலகம் அருளுலகம், அவ்வுலகிற்கு அருள் வேண்டும். ஆகவே இந்த உலகிற்கு பொருள் வேண்டும் என்றால் அந்த உலகிற்கு அருள் வேண்டும், ஆகவே, இந்தப் பொருளையெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் அருளாக மாற்றவேண்டுமென்றால், திருப்பணியிலே கொண்டுபோய்ப் போட்டு அதைத் தர்மம் என்ற முறையில் காசோலை யாக மாற்றிக் கொண்டால், அது, அங்கே அருளாக மாறிவிடும் என்பது அந்தச் சிறந்த வள்ளுவனுடைய வாக்கு.

''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை
அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை''

பொருளெல்லாம் அருளாக மாற வேண்டும் என்றால் அதைத் திருப்பணி யிலே தர்மமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை நாம் சிந்திக்கவேண்டும் இந்த நிலையிலே நாம் சிவப்பணி என்ப தைச் சிந்தித்து, மாவை முருகனுக்கு நடக்கப் போகின்ற இம் மாபெரும் திருப் பணியிலே நம்முடைய உள்ளத்தையும் அர்ப்பணம் பண்ணி, நம்முடைய பொருட் களையும் அந்த நற்பணி சிறந்த முறை யிலே நடைபெறுவதற்கு உளமார்ந்த அன் போடு நாம் உதவுவோமாயிருந்தால், மாவை முருகன் எமக்கு ''சகல செல்வ யோகமிக்க தகைமை, சிவஞானமுத்தி, பரகதி'' எல்லாம் கொடுப்பான் என்பதில் சந்தேகமே இல்லை, என்பதைப் பெருமக்க ளாகிய உங்களுக்குச் சொல்லி, இந்த அரு மையான திருப்பணிக்கு நீங்கள் யாவரும் உதவிசெய்து, சிறந்த முறையிலே, மாவைக் கந்தனது திருப்பணிகள் நிறைவேற யாவ ரும் உளமார உதவவேண்டும், என்று உங் கள் எல்லோரையும் உள்ளன்போடும் கேட் டுக் கொள்கிறேன்.

## மாவை ஆலயக் கற்றூணில் கண்ட கலையழகு

— கஜசம்காரமூர்த்தி

''விரித்த பலகதிர் சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்த தோர் கோலாகல பைரவனாகி வேழம்
உரித்து, உமை அஞ்சக்கண்டு, ஒண் திருமணிவாய் விள்ளச்
சிரித்து, அருள் செய்தார், சேறைச் செந்நெறிச் செல்வனாரே''.

எனத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் கஜசம்காரமூர்த்தியைப் பாடிப் பரவுகின்றார். இம் மூர்த்தியுருவாகிய கதைதான் என்ன? யானை வடிவுடைய கஜாசுரன் என்பவன் பிரம்மாவை நோக்கித் தவஞ் செய்து பல வரங்களைப் பெறுகிறான். ஆணவத்தால் மமதை கொண்டு, தேவர்கள், முனிவர்கள் மனிதர் ஆகியோரைத் துன்புறுத்துகிறான். அமரரும், முனிவரும், தேவதேவமகாதேவனி டம் முறையீடு செய்ய, இறைவன் கஜாசுரனின் உடலிற் புகுந்து அவன் யானைத் தோற்றத்தைக் கிழித்தெறிந்து, அவன் தோலையே போர்வையாக்கிக் கொண் டார். கச்சியப்பர் கந்தப்புராணத்திலே கஜசம்சார சித்திரத்தை,

''ஒரு பதத்தினைக் கவானுறு
திருக்கரத்து உகிரால
வெரிநிடைப் பிளந்து
ஈரிருதாள் புடைமேவ
குருதி கக்கியே ஓடிட
அவுணர்தம் குலத்து
கரி உரித்தனன் கண்டு நின்று
அம்மையும் கலங்க''

என்று பாடுகிறார்.

மாவைத்தல நிர்த்த மண்டபக் கற்றூணிலே இம்மூர்த்தி, ஒரு காலை யானை யின் தலைமேல் ஊன்றி மறு காலை மடக்கி, இரு கைகளாலும் யானையை உரித் துக் கிழிக்கும் காட்சியை அழகாக வடித்துள்ளார் சிற்பி. மறுமுறை ஆலயம் வரும்போது கலா ரசிகர்கள் பார்க்க வேண்டிய கற்சிற்பம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைப் பெருமானே!
# திருப்பணிக்கு நன்னிதியந் தா!

பண்டிதர் மு. கந்தையா B. A. (ஏழாலை)

மாவைப் பெருமானே வையமெலாம் வந்திறைஞ்சுந்
தேவே சிவகுருவே செவ்வேளே — தேவர்
விருப்பமிகத் தோத்திரிக்கும் வேற்கரநின் கோயிற்
றிருப்பணிக்கு நன்னிதியந் தா.

ஓலக்க மண்டபஜீர் ணோத்தா ரணத்தவஸ்யம்
சீலத்த பக்தரெலாந் தேர்ந்திட்டார் — ஞாலக்
கருப்பிறவிக் கட்டறுக்குங் கந்தாவிம் மேன்மைத்
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

உனக்கில்லாச் செல்வ முலகுக்கெங் குண்டோ
மனக்கினியார் வாழ்வே மகிபா — நினக்காம்
உருப்பொலிவுக் கொக்குமதோ ரோலக்க மாடத்
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

சித்திரப்பொற் றூணிரையிற் சிங்கவுருப் பாரிக்கும்
உத்தரத்தோ டோங்குமணி மண்டபமும் - மெத்தும்
உருப்பொலிபொற் போதிகையுந் தூபிகையுங் காண்போம்
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

ஜீர்ணமுறு மண்டபநின் தெய்வவெழிற் கொவ்வாது
காணுமெங்கள் காட்சிக்கு மன்னதே — சேணூர்
திருப்பொலிநின் தேவியர்சீர்க் கொவ்வாதீ தையா
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

மண்தந்தாய் பொன்தந்தாய் வந்திப்பார் சென்றேற
விண்தந்தாய் பேறுபல வேறுதந்தாய் — மின்தந்
தருப்பணிநேர் சீர்முறுவ லாயிழையார் பங்கா
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

பாட்டாற் புகழ்பகழிக் கூத்தற்கு மாணிக்கத்
தீட்டார் நிதியத் திரளெடுத்தே — நீட்டுந்
திருக்கையா லெம்மருமைத் தேவேநின் சீர்த்தித்
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கல்பொன் னாகத் திருநீறு காசாக
அங்கணடி யாருக் கமைத்தருளித் — தங்கப்
பொருப்பமருங் கைலைப் புனிதனருள் செல்வா
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

அப்பனருந் தோழ னளகேசன் கன்னிதியம்
எப்பொழுதும் நின்னிதிய மன்றோதான் — செப்பார்
உருப்பொலியுங் கொங்கை யுமையாள் குமரா
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

செட்டிமக னொருநீ நின்பணிக்கு நேர்தங்கக்
கட்டி தரநினைப்பின் நின்கையைத் — தட்ட
ஒருப்படுவா ருண்டோதா னொண்கதிர்வே லையா
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

பொன்னுலகும் பூவுலகும் போதவொரு சீதனங்கொள்
மன்னவநின் னோலக்க மண்டபமீ — திண்ணம்
இருப்பதிந்த வாறேல் எமையழித்தி அன்றேல்
திருப்பணிக்கு நன்னிதியந் தா.

சீதனத்திற் கைவைக்கத் தேவியர்தா மொவ்வாரோ
மாதனமற் றேதுநிற்கு வாய்த்திலதோ — நாதா
புரப்பவன்நீ யிங்கிருக்கப் புன்கணெமக் கேனோ
திருப்பணிக்கு நன்னிதியந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி இன்பம் பெறவேண்டும்

''கரவைக் கிழார்''

மாவைக் கந்தன் மயில்மீதில்
மங்கையர் நடுவில் வீற்றிருக்க
காவில் திகழும் மலரொளிபோல்
கார்த்தி கேயன் முகம்மலர
தாவிப் பறந்தே அவன்தாளை
தமியேன் பற்றிட முனைந்திடவே
கூவி மறித்தே ஐம்புலன்கள்
குகனை அடையத் தடைசெய்ய

மனமோ புலன்களின் வயப்பட்டு
மாண்புடை மறைபொருள் தனைமறந்து
சினத்தீ வாட்டிடத் தினம்வாடி
சிந்தையில் வஞ்சம் மிஞ்சிடவே
தனமென இழிபொருள் பலநாடி
தலைக்கனம் கொண்டு மிகத்தாழ்ந்து
வனத்தின் நடுவில் அகப்பட்ட
வழிவகை யற்ற மனிதன்போல்

அலைந்தே அலைந்தே உலைந்தென்றும்
அகத்தில் சோர்வது தோன்றாமல்
நிலைத்தே என்மனம் நின்பாதம்
நிதமும் நினைத்தே நினைநாடி
மலைபோல் உறுதி கொண்டுயர்ந்து
வள்ளி மணாளன் புகழ்பாடி
அலையே இல்லா அருட்கடலில்
அமைதி இன்பம் பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆலயப் புனருத்தாரணம்

**தெ. து. ஜயரத்தினம் J. P.**
*(முன்னைநாள் அதிபர், மகாஜனக் கல்லூரி)*

## அவர்கள் விடுக்கும் வேண்டுகோள்!

ஈழத்தின் வடபால் சைவசமயத்தையும், சைவகலாசாரத்தையும் பேணிக் காத்து வந்த சைவாலயங்களுள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்கள் பொருந்தியதும், தில்லைவாழந்தணர் மரபின் வழிவந்த வேதியர்கள் வேத சிவாகம ஒழுங்கு விதிகளைப் பேணி மற்றைய ஆலயங்களுக்கெல்லாம் வழிகாட்டும் பெருமையைப் பெற்றுள்ளதும் மாவை முருகப் பெருமானின் திருக்கோயிலாகும். இத்தலத்திற்குப் ''புரம்'' என்ற சிறப்புப் பெயர் பொருந்தியுள்ளமை, அது நாட்டின் இராசதானியாக ஒருகால் இருந்ததென்பதை விளக்கிக் கொண்டிருக்கிறது. இவ்வாலயம் ஒரு கிராமத்துக்கோ ஒரு பகுதியார்க்கோ உரியதாகாமல் அகில இலங்கைவாழ் சைவமக்கள் அனைவர்க்கும் பக்தியை வளர்க்கும் சாதனமாகவும் விளங்கித் திருவிழாப் பொலிவுமிக்கதாய்த் துலங்குவதை யாவருமறிவர். ஆகவே இக்கோயில் சிறப்புற விளங்க ஆவன செய்யவேண்டிய பொறுப்பு இந்நாட்டுச் சைவமக்கள் யாவரையும் சார்ந்ததாகும்.

கோவிற் கடவை என்னுமிடத்தில் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பெற்ற முருகப் பெருமானின் ஆலயமானது இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிரம்மஸ்ரீ சு. சாமிக் குருக்கள் அவர்கள் காலத்தில் மூன்று பிரகாரங்களையும், கர்ப்பக் கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்தமண்டபம், கோபுரமுன் வாயில் மண்டபம், ஆகியவற்றுடன் பிரகாரங்களை வகுத்துக் காட்டும் சுற்றுப்புற மதில்களையுங் கொண்டதாக அமைக்கப்பட்டது. இக்கட்டிடம் சுண்ணும்பினுலும், கண்ட கற்களாலும் நிருமாணிக்கப்பட்டிருந்த காரணத்தால் அதை அவசியம் புதுப்பிக்க வேண்டுமென்று தீர்மானித்து, இரத்தினக் குருக்கள் என அழைக்கப்பட்ட பிரம்மஸ்ரீ சா. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் இந்நூற்றுண்டின் முற்பகுதியில் பல திருத்தவேலைகளைச் செய்தனர். 1927ஆம் ஆண்டுவரையில் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் இரண்டும் ஓராண்டு காலத்திற்குள் கருங்கல் திருப்பணியாக அமைக்கப்பட்டமை ஓர் அரிய சாதனையாகும். வானளாவி நிற்கும் மேற்குப்புற வாயிலின் இராஜகோபுரமும் இரத்தினக் குருக்கள் அவர்கள் காலத்திலேயே கட்டப்பெற்றது.

இத்திருப்பணிகளைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் அவர்கள் தமது நிருவாகத்தின் கீழ் 1956ஆம் ஆண்டில் மகாமண்டபத்தையும் நிருத்த மண்டபத்தையும் கருங்கல் திருப்பணியாக அமைக்கவேண்டுமென்ற பெருவிருப்புக் கொண்டு திருப்பணி வேலைகளை ஆரம்பித்தார். அவை இன்னும் பூர்த்தியாகாத நிலையிலே இருக்கின்றன. இப்புனித திருப்பணிகள் மாவைக் கந்தப்பெருமான் திருவருளால் மிக விரைவில் நிறைவுறும் என்ற திடமான நம்பிக்கை எமக்குண்டு.

1969ஆம் ஆண்டு ஆதீனகர்த்தாவால் நியமிக்கப்பட்ட திருப்பணிச் சபை மூலத்தானத்தின் ஸ்தூபியையும் சுற்றுப்பிரகாரத் தூபிகளையும் தெற்குப்பிரகார மதில்களையும் புதுப்பித்துள்ளது. அதைத் தொடர்ந்து உள்வீதி மண்டபமும் புதுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கப் பெற்றுப் பொலிவுடன் விளங்குவது முருகன் அடியவர்களுக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டுவதாகும்.

மகோற்சவ காலத்தில் ஆலயத்திற்கு முக்கிய அங்கமாக விளங்குவது வசந்த மண்டபமாகும். முருகப்பெருமான் ஆலயத்தில் இம்மண்டபம் மிக விஸ்தாரமாகவும், சிறந்த அமைவுள்ளதாகவும் விளங்குகிறது. பெருவிழாக் காலத்தில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் குழுமிநின்று வழிபடும் காட்சி எம்மனத்தைக் கொள்ளை கொள்வதாகும். அதுவுமன்றி இவ்வசந்தமண்டபம் ஒரு சபாமண்டபம் போல் சில காலங்களில் அமைந்து வந்திருக்கிறது. மாவை ஆதீனம் கலைஞர்களைக் கௌரவிப்பதும், பேரறிஞர்களுக்குப் பட்டமளிப்பதும், சமயப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் நிகழ்த்துவிப்பதும் இந்த வசந்தமண்டபத்திலேயே ஆகும். பழுதடைந்து கிடக்கும் இவ்வசந்த மண்டபத்தைச் சிற்ப சாத்திர முறைக்கமைய த் திருத்தியமைக்க 'வேண்டுமென்றுணர்ந்து கோயிற் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணிச் சபை செவ்வனே செயற்பட்டு வருகிறது. இத்திருப்பணியின் முதலாவது அங்கமாக, பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளிக் காட்சி தருவதற்கான தேவசபை நிருமாணிக்கப்படவுள்ளது. திருப்பணிச் சபையார் தேவசபைத் திருப்பணி ஆரம்ப அடிக்கல் நாட்டுவிழாவைப் புதுமுறையில் நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். ஆயிரத்தெட்டுச் சங்குகளை ஆயிரத்தெட்டு அன்பர்களைக் கொண்டு அத்திவாரத்தில் பதிப்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளனர். இதனால் ஆலய நிர்மாண வேலைக்கான நிதியின் பெரும்பகுதி கிடைப்பதோடு, பங்கு கொள்வோர்க்கு வாழ்க்கையிற் கிடைத்தற்கரிய திருவருட் பேற்றுக்குரிய புனித சந்தர்ப்பமும் வாய்க்கப் பெறுகிறது.

ஆகவே இப்புனித கைங்கரியத்தின் மகத்துவத்தை ஒவ்வொரு சைவப் பெருமகனும் உணர்ந்து அதில் ஒருமைப்பாட்டுடன் ஈடுபட வேண்டுமென்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன். திருப்பணி வேலைகள் யாவும் இனிது நிறைவேற எல்லாம் வல்ல முருகப் பெருமானின் கிருபா கடாட்சம் துணைநிற்பதாக.

## மாவை ஆலயக் கற்றூணில் கண்ட கலையழகு

**— லிங்கோத்பவர்**

தம்மில் யார் பெரியவர் என்று வாதத்திலே பிரம்மாவிற்கும் திருமாலுக்கும் பலத்த போட்டி, முடிவுகாண முயன்ற இருவருக்குமிடையே, தன் அடியையும், முடியையும், யார் முதல் காண்கின்றனரோ அவரே பெரியவர், என்று கொள்ளலாமெனக் கூறிச் சிவபெருமான் அனலுருவத்திருமேனிச் சுவாலையாக ஓங்கியுயர்ந்து வளர்ந்து நின்றார். ஜோதிப் பிளம்பின் அடிதேடிப் பன்றி உருவில் திருமாலும், முடிதேடி, அன்னப் புள்ளாகப் பிரமனும் முயன்றனர். இருவர் முயற்சியும் தோல்வியடைந்து, தம் ஆணவத் செருக்கை அடக்கிக் கொண்டனர். அக்கினிப் பிளம்பாக இறைவன் எடுத்த கோலத்தையே லிங்கோத்பவத் திருக்கோலம் என்றனர் கலை வல்லுநர். இத்திருவுருவை சேக்கிழார் சுவாமிகள்

''காணாத அருவினுக்கும், உருவினுக்கும், காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கும், நிகழ்குறியாம் சிவலிங்கம்;
நாணாது நெடியமால், நான் முகனுங்காண நடுச்
சேணாடும் தழற் பிழம்பாய்த் தோன்றியது, தெளிந்தாராய்''

எனப் பாடுகிறார்கள். இச்செஞ்சுடர் சோதியுருவை மன்னுபுகழ் மாவை ஆலய தீர்த்த மண்டபக் கற்றூணில் உருவாக்கிக் காட்டுகிறான் கலைச் சிற்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை ஆலயக் கற்றூணில் கலையழகு

**சரபமூர்த்தி**

பிரகலாதனைத் துன்புறுத்திய இரணியனை, மகாவிஷ்ணு, நரசிங்கரூப
மெடுத்து, அவன் உடல் கிழித்து, உதிரம் குடித்து அழிந்தார். நரமாமி
சம், நரஇரத்தம் குடித்த வெறியிலே பாதி மனிதனாயும், பாதி மிருகமா
மாயுமிருந்த நரசிங்கம், மிருக வெறியேறிப் பற்பல அட்டூழியங்கள் செய்து
உலகை அழிக்க முற்பட்டது. இந்நிலை கண்டு தேவரும், முனிவரும் சிவ
பிரானிடம் முறையிட. அவர் அண்ட பேரண்டப் பட்சியாகிய சரபப் பட்
சியின் உரு எடுத்து நரசிங்கத்தைத் தன் கால்களிடையே வைத்து அடக்
கினார். இது சிவன் சரபமூர்த்தமான கதை. இதை மாவை ஆலயக் கற்
றூணில், நரசிம்ம மூர்த்தம், வடிக்கப்பட்ட அதே கற்றூணில் அச்சம்
தரும், பயங்கர மூர்த்தமாப் பட்சி முகமும், சிறகுகளும் கொண்டு நர
சிங்கத்தை அடக்கும் காட்சியாக வடித்திருக்கிறார் சிற்பி. நரசிம்மம்
பார்த்த கலைக்கண்ணோடே சரபரையும் கண்டு தரிசிக்கும் வாய்ப்பைத்
தந்த சிற்பிக்கு நன்றி கூறலாம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை வளர் செல்வ முத்துக்குமரன்

அழியா அழகு, மாறா இளமை, தெய்வத்தன்மை, பேராண்மை ஆகியவை கலந்து இருப்பவன் முருகன். இறைவனை அழகுத் தெய்வமாகக், குமரனாக, இளைஞனாக, ஆண்மைக்காரனாக கண்டு தலை வணங்கியவன் அழகுணர்ச்சியின் அதீத நிலைக்கு உந்தப்பட்ட கலைஞன் அவன் கலையாலும், கவிதையாலும் ஆராதனை செய்த ஆண்டவனே முருகன்.

கவிதையால் ஆராதனை செய்த கலைஞர்களிலே சிறந்தவர் அருணகிரிநாதர். "அயிலும், மயிலும், அறமும், நிறமும், அழகுமுடைய பெருமாளாக" முருகப் பெருமானைக் கண்டு அவனைக் "கனகமயிலில் அழகு பொலியக் கருணை மருவி வரவேண்டும்" என்று வேண்டியிருக்கிறார். அழகு முருகனை, அவன் இருக்கும் வண்ணத்தில் ஆராதித்துத்தான் பெற்றபேற்றையும்

"அருணையில், இடைகழியில், உரககிரியில், புவியில்
அழகிய செருத்தணியில், வாழ் கற்பக்கடாவியில்
அறிவும், அறிதத்துவமும், அபரிமித வித்தைகளும்
அறியென, இமைப்பொழுதில் அறிவித்த வேதியனும்"

என்று பாடியிருக்கிறார்.

கலையால் ஆராதனை செய்த கலைஞர்கள் ஏராளம். அப்படி ஆராதனை செய்யப்பட்ட அழகு முருகனும் மாவைப் பதிவளர் செல்வ முத்துக்குமரையனின் நிழலுருவையே எதிர்பக்கத்தில் காண்கிறோம்.


வள்ளி தேவசேனாசமேத இம்மூர்த்தி மாவை உற்சவகாலங்களில் அரிய அணி பணிகள் அணிந்து, பொற்கிரீடம், சேவற்கொடி, மரகதவேல் பிடித்து, மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பச்சை மயிலேறிப் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

முருகன் என்ற பெயருக்கே இசைவாக இரண்டரை அடி உயரமும், பொன்முலாம் பூசப்பட்டு தக்கத் தகவென ஒளிவீசும் தன்மையுமான இத்திருவுருவில் சிற்பக்கலை சிறந்து மிளிர்கின்றது. அழகின் மாட்சி கொலுவிருக்கும் இவ்விக்ரகம், ஆடையாபரணங்கள் செதுக்கப்பட்டு, பின்னிரு கைகளிலும் ஆயுதம் தாங்கி, ராஜ கம்பீர மிடுக்குடன் காட்சி கொடுக்கிறது. நிறைந்த அழகு, அதீத அழகு ஆகியவற்றை ஒருங்கு சேரக் காணக்கூடிய வகையாக அமைக்கப்பட்டுள்ளது.

இம்முத்துக்குமர வடிவை உன்னிப் பார்க்கும்போது, இயற்கை அழகின் மலர்ச்சியில் உதித்த முருகன், கலையழகின் மலர்ச்சியிலே தெய்வீகத்தன்மை பெறுவதைக் காணலாம். தெய்வயானையின் வலக்கரத்தில் நீலோற்பல மலரும், வள்ளியம்மையின் இடக்கரத்திலே தாமரை மொட்டும் கொடுத்து இவ்விரு தேவியர் சிலைகளையும் வடித்தெடுத்திருக்கிறான் சிற்பி.

"ராஜ கம்பீர நாடாளும் நாயகன்" என்ற அருணகிரி வாக்கிற்கமைந்த செல்வ முத்துக்குமரனையும் அவன் தன் தேவியுரையும் "கண்டு தொழ நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அருணகிரிநாதருடன் சேர்ந்து கிலேசப்படுவோமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Donated by:-
Mr. K C. KULARATNAM

249017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை மூர்த்தங்கள் (3)

# சிதம்பரேஸ்வரி சமேத சிதம்பரேஸ்வரர்

இறைவனது திருவுருவங்கள் யாவற்றிலும், கலை, தத்துவம், தெய்வாம்சம் பொருந்தியது நடராஜ மூர்த்தம். இம் மூர்த்தம் சிவனுடைய நூற்றெட்டுத் தாண்டவ மூர்த்தங்களில் ஒன்ருகும். 'வானம் மணிமுகடாய், மால் வரையே தூணுக, ஆன பெரும் பார் அரங்காக,' இறைவன் ஆடிக் கொண்டிருக்கிருர் அவன் ஆடுவதால் அண்டசராசமும் ஆடுகிறது, இயங்குகிறது. இவ்வுலகில் ''எங்கும் திருநடனம், எங்கும் திருநட்டம்' ஊனுகி, உயிராகி, உணர்வாகி, உள்ளும் புறமும் நின்று ஆடும் இறைவன், எம்மையும் சாட்டையுள்ள பம்பரம் போல் ஆட்டுவித்துக் கொண்டும் இருக்கிருன். அணுவில் அணுவாக, அண்டத்தில் அண்டமாக ஆடும் இறைவனைக் கல்லிலும், கலையிலும், கவியிலும், கடைந்தெடுக்கிருன் கலைஞன்.

இந்த நடராஜ தாண்டவம் நடைபெறுவது தில்லைவனம் எனப்படும் சிதம்பரத்திலே, பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் விரும்பியவண்ணம், தில்லையில் சிவபெருமான் நர்த்தனம் செய்தான் என்பது புராணக் கூற்று.

இத்திருநடனத்தைச் சிதம்பரத்தில் கண்ணுற்ற அப்பர் சுவாமிகள் அப்படியே படம் பிடித்ததுபோல.

''குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமுண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

என்று பாடியுள்ளார்.

மாவை ஆலயத்தில் சிதம்பரேஸ்வரர், சிதம்பரேஸ்வரி விக்கிரகங்கள் சிதம்பரத்தில் இருந்தே தருவிக்கப்பட்ட அழகொழுகு, விக்கிரகங்கள். இத்திருவுருவங்களில் நிழல் கித்திரங்களே எதிர்ப்பக்கத்தில் உள்ளவை.

பாதிப் பிறையணி சடாமுடியும், நான்கு தோள்களும், புன்னகை தவழும் திருமுக வதனமும், இடப்பாதத்தை தூக்கியுயர்த்தி, வலக்கரங்கனில் முன்னிருப்பதால், அபய முத்திரை காட்டியும், பின்னிருப்பதில் டமருகம் ஏந்தியதாகவும், இடதுகரங்களில் முன்னுல் இருப்பதை இடப்பாகத்தைச் சுட்டிக் காட்ட வீசியதாகவும், பின்னுல் இருப்பது அக்கினி ஏந்தியதாகவும், நாசர்ப்பம், வலப்புயத்திலிருந்து நெளிந்து படமெடுக்கவும் உள்ளதாய் அமைந்த திருக்கோலம், மாவையுறை சிதம்பரேஸ்வரரின் திருவுரு. அம்மையோ அமைதி தவழ தன் இரு சேடியருடன் காட்சி அளிக்கிருள். இவ்வற்புதத் திருக்கோலத்தின் அடியிலே பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் கூப்பிய கையினுராய் காட்சி அளிக்கிருர்கள். இத்திருக்கோலங்களுக்கு. இவ்வாலயத்தில், சிவராத்திரி விழா வன்று நடைபெறும் அபிடேக ஆராதனைகள் மிகச் சிறப்பு வாய்ந்தவை. லிங்கோத்பவ நேரத்தில் நடைபெறும் அபிடேகம் மிகவும் அத்புதம் நிறைகாட்சியாக விளங்குவதை யாவரும் பார்த்து உணரவேண்டிய தொன்ருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆலயக் கற்றூணில் கலையழகு

— ஏகபாத திரிமூர்த்தி

இவ்வுலகிற்கு இறைவன் ஒருவன். அவன் படைத்தல், காத்தல்; அளித்தல், ஆகிய முத்தொழில்களையும், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயர்களோடு செயல்படுகிறான். பிரம்மாவும், விஷ்ணுவும், சிவனிடத்தில் அடக்கம் என்பதை விளக்க எழுந்த மிக அபூர்வமான மூர்த்தம் ஏக பாத மூர்த்தம்.

மூவரும் ஒருருவாய் இருக்கும் இம்மூர்த்தம் மாவைக் கற்றூணிலே ஒரு அடி உயரமளவில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் ஆச்சரியப்படுவீர்கள். சிவன் ஒரு பாத முடையவராய் நடுவில் மான் மழுவுடன் நிற்கிறார். அவர் இடையிலிருந்து எழுந்து வலப்புறமாக நான் முகனும், இடப்புறமாக விஷ்ணுவும் கிளைத்தெழுந்து வடிவு கொடுக்கின்றார்கள். சிருஷ்டி, திதி, சங்காரம் ஆகிய முத்தொழில் புரியும் மூவரும், ஒருவரே என்ற தத்துவச் சிறப்புடைய இத்திருவுருவை மாவை ஆலயக் கற்றூணில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கந்தன் என்ற நாமம்"

## சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தன் என்று சொல்லக் கலங்குமே"

என்பது ஆன்றோர் வாக்கு. கந்தன் என்ற சொல்லுக்கு திரண்டவன்; ஒன்று சேர்ந்தவன் என்பது பொருள்.

"சேயவன் வடிவம் ஆறும் திரட்டி நீ
ஒன்றாய்ச் செய்தாய்
ஆயதனாலே கந்தனும் நாமம் பெற்றான்"

என்று கந்தபுராணம் கூறுகிறது. சுவாமி என்பதும் வடமொழியிலே முருகனுக்குச் சிறப்புப் பெயராக அமைகிறது. ஸ்வம் என்பது தன்னைச் சேர்ந்தது; தன்னுடையது என்ற பொருளில் வருகிறது. அண்டசராசரங்கள் அனைத்தும் அவனுடையதே என்னும் பொருளில் கந்தஸ்வாமி என்ற நாமம் அமைகிறது. மாவிட்டபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பெருமானைக் கந்தஸ்வாமி என்றே அழைத்து வழிபடுகிறோம். முருகப் பெருமானின் திருவுருவங்கள் பதினாறும் அழகிய அருள்மிகு வடிவங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஞானசத்தி தரன், கந்தசாமி, தேவசேனாபதி, சுப்பிரமணியர், களிற்றூர்திப் பெருமான், சரவணபவன், கார்த்திகேயன், குமரன், அறுமுகவன், தாரகாந்தகர், சேனாபதி பிரமசாத்தன், வள்ளிகல்யாண சுந்தரர், பாலசுப்பிரமணியர், கிரவுஞ்சபேதனர், சிகிவாகனர் என்பன அவை. இந்தப் பதினாறு பேர்களையும் சொல்லி வழிபடுவர் எல்லாச் சிறப்பும் பெற்றின்புறுவர் என்பர். "கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்" என்று போற்றுகிறார்கள் தேவர்கள். ஸ்கந்தன் என்ற சொல்லுக்கு சத்துருக்களை அழிப்பவர் என்பதும் பொருளாகும். இத்திருவுருவம் வணங்குபவர்கள் வேண்டும் இஷ்டத்தை அருளும் கற்பக விருட்சமாய் செந்தாமரையின் ஒளியாய் புன்னகை ததும்பும் இன்முகத்துடன் விளங்குவது ஸ்கந்தன் திருவுருவமாகும். இத்துணைப் பேரருள் மிக்க கந்தப்பெருமானுக்கு அமைந்த ஈழத்துத் திருக்கோயில்களில் மிகப் பழமை வாய்ந்தது மாவிட்டபுரத் திருத்தலமாகும். இதனைப் புதுக்குவிக்கும் நோக்கம் கொண்ட அருளாளர்கள் பலர் வசந்த மண்டபத் திருப்பணியை நிறைவேற்ற முன்வந்துள்ளனர். இவ்வெண்ணமே பெரும் புண்ணிய பேற்றினால் ஏற்படுவதாகும். திருக்கோயில் வழிபாட்டினால் தான் மனிதர்கள் தமது பாவங்களைப் போக்கிக் கொள்கிறார்கள். அமைதியுடன் வாழவும் சமுதாயத்தோடு நல்லுறவோடு வாழவும் பயிற்சி பெறுகிறார்கள். தூல உலகில் வாழும் மனிதனைச் சூக்கும உலக அருட்சக்தியோடு இணைக்கும் இடம் ஆலயமேயாகும். இப்பணியில் ஈடுபட்டுச் சிறப்புறத் திருப்பணியை நிறைவேற்றுவது சைவமக்கள் ஒவ்வொருவரதும் பெருங்கடனாகும்.

"விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நல்வழி காட்டி ஆள்வாய்"

## செஞ்சொற் புலவர் மா. குமாரசுவாமி

மண்ணினில் உன்றன் கோல மாட்சியைக் காண்பதற்கு
எண்ணில கண்கள் வேண்டும் இங்கெனக் கதுவுமில்லை
பண்ணொடு பரவியேத்தும் பக்குவ நிலையுமில்லை
அண்ணலே! மாவைசேரு மாதியே யாதுசெய்வேன்.

ஆக்கையே கொண்டு இந்த அவனியி லடைந்த துன்பம்
வாக்கினிற் சொல்ல வொண்ணு! வள்ளலே உனதுகீர்த்தி
நாக்கினிற் கொண்டு ஏத்தி நானில மதனிற் போற்ற
ஊக்கமு மளிப்பாய் மாவை உத்தம குமர வேலா.

ஆவியோ வழியாதென்றும் ஆக்கைதா னழியு மென்பர்
பாவியே னுடலை யிந்தப் பாரினில் விடுத்த பின்னர்
ஆவிதா னருகிருந்து அன்புடன் பணிந்து போற்ற
மாவைசேர் குமரா ஈங்கு மனமுவந் தருளுவாயே.

பெற்றவென் தந்தை தாயர் பேணிய சுற்றமோடு
உற்றவென் நண்பர் தாமும் உன்பத மடைந்துவிட்டார்
மற்றினிப் பற்று எல்லாம் மாவைசேர் குமரா வுன்றன்
பொற்றிருப் பாத மன்றிப் புவியினில் வேறு முண்டோ.

கல்லெனும் மனத்தனேனைக் கயவனைக் கருணையில்லா
வல்வினை பிடித்து வாட்டும் வஞ்சகக் கள்வனேனை
தொல்வினை தொடரா வண்ணம் தூயநின் பாதமேத்தும்
நல்வழி காட்டி யாள்வாய் நலந்திகழ் மாவை வேலா.

காலனுர் வருதல் கண்டு கலங்கிடும்போது மாவை
வேலனே யென்று உன்னை விருப்பொடு அழைப்பேன் நீயும்
கோலமா மஞ்ஞைமீது குலவிட வந்து காட்சி
ஞாலமீ தெனக்குத் தந்து நல்லருள் புரிகுவாயே.

வெற்றிலை கமுகு வாழை விளங்கிடு தோடைமாவுஞ்
சுற்றியே விளங்குஞ் சோலை சூழ்ந்திடத் திகழும் மாவை
வெற்றிவேற் குமரா! நின்னை விருப்பொடு தொழுது நின்றேன்
பற்றிய வினைகள் போக்கிப் பாததா மரையிற் சேர்ப்பாய்.

மங்கையரிருவர் சூழ மணிமயிலேறி நின்று
பொங்கிரு ளகற்றும் மாவைப் பொற்பதி யுறையுங் கந்தா
அங்கையி லனல தேந்தி யாடிடு மையன்மைந்தா!
எங்குறை யெவையும் போக்கி யெமக்கருள் புரிவதென்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுவடிச்சாலை சுடர்விட்டு ஒளிருக"

**த. சண்முகசுந்தரம்** *பி. ஏ. (இலங்கை)*
*கல்வி டிப்பிளோமா (இலங்கை)*

''ஆதித்த நல்லூரில் கண்ட முதுமக்கள் தாழிகளில் வேல்மட்டுமல்லாது இரும்புக் கொடி பட்டங்களும், வெண்கலத்தில் வார்ப்பு வேலையாகச் செய்த கோழி உருவங்களும் கண்டுள்ளனர். பண்டைத் தமிழர் வேலை ஆயுதமாகக் கொண்ட முருகனை வழிபட்டு வந்தனர் என்பதும், அம் முருகனுக்குக் கோழி வடிவம் பொறித்த கொடி அடையாளம் என்பதும் யாவருமறிந்த உண்மையே.'' இவ்வாறு பேராசிரியர் கே. கே. பிள்ளை, வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் பற்றி கூறுகின்றார். ‡1 இன்று தமிழ் மக்கள் உலகின் பல பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். இவர் எங்கு வாழ்ந்தாலும் தம் மத நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் கைவிடுவதில்லை. இதனால் தமிழர் வாழ்கின்ற கடல் கடந்த பகுதிகளில் கோயில்கள் நிறைந்துள்ளன. இக் கோயில்களில் முருகன் கோயில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

தமிழ் நாட்டுக் கோயில்கள் அன்பு நெறியின் நிலைக்களமாகத் திகழ்கின்றன; அறநெறியை வளர்க்கின்றன. மெய்யறிவின் பேரூற்றாக விளங்குகின்றன. சைவ மக்களின் ஆன்மீக வாழ்க்கையில் கோயில்கள் மையமாக அமைந்துள்ளன. யாழ்ப்பாண வைபவ மாலையின்படி சோழப் பேரரசின் தேசாதிபதியான திசையுக்கிர சோழன் மகளான மாருதப்புரவல்லி அம்மையார் மாவிட்டபுர முருகன் கோயிலை நிறுவினார். இக்கோயில் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் இப்பகுதியில் சைவம் தழைத்தோங்கி வந்துள்ளது. இங்கு பழம்பெரும் பாரம்பரியங்கள் பேணிக் காக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகவும் முக்கியமானது மாவை ஆதீனத்தின் சுவடிச்சாலை. சுவடி என்பதன் பொருள் ஏடு. இந்தச் சுவடிச் சாலையின் விலைமதிக்க முடியாத எச்சமாக 50க்கு மேற்பட்ட ஏடுகள் இருக்கின்றன. ‡2 இந்தச் சுவடிச் சாலையைப் பற்றியும் இந்த ஏடுகள் பற்றியும் முழுமையான அறிவு பெற்றவர் மாவை ஆதீனகர்த்தர் அருமறையந்தணர் பெருமகன் சு. துரைசாமிக் குருக்கள். இவர் தன்னுடைய இளமையைப் பற்றி கூறியவை இங்கு நினைவுகூரற்பாலது. ‡3

''என் தகப்பனாரின் கட்டளைப்படி கோயில் ஆதீனத்துடன் ஒன்றிப்போனேன். எமது ஆதீனத்தில் பிள்ளையார் வாசலுக் கண்மையில் சுவடிச்சாலை ஒன்றிருந்தது. அங்கே நூற்றுக்கணக்கான ஏடுகள் இருந்தன. கிரந்த ஏடுகளும், புராணங்களும் இருந்தன. இனி இங்கேதான் உன்படிப்பு என்றார் தகப்பனார். காமியாகமம், குமார தந்திரம் போன்ற நூல்களையும்; கந்தபுராணம், பெரியபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் போன்ற நூல்களையும் படித்தேன். சுவடிச் சாலைக்குப் பொறுப்பாக விருந்த தம்பிரான் எனக்கு உதவியாக இருந்தார். இந்தப் படிப்பிலே நான்

‡1 தென்னிந்திய வரலாறு – பேராசிரியர் K. K. பிள்ளை பழனியப்பா சகோதரர் பதிப்பு. பக்: 17.

‡2 'பூர்வகலா' மலர் I – யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகச் சஞ்சிகை 'மாவிட்டபுர ஆதீனச் சுவடிச் சாலையும் ஏட்டுப் பிரதிகளும்'' – ஆ. சிவநேசச் செல்வன் பக்: 42.

‡3 ''முருகனைப் பூசிக்க அருமறைக் கல்வி'' – கலைக்கண் (23 - 2 - 74) – மாவை ஆதீன கர்த்தர் வழங்கிய நேர்முக உரைத் தொகுப்பு – த சண்முகசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேர்ச்சி பெறுவதற்காக எனது தகப்பனார், வடலியடைப்பு அருணாசல சாத்திரிகளை அமர்த்தினார். தகப்பனாரின் வேண்டுகோட்படி இந்தக் குரு எமது ஆதீனத்திலே வசித்தார். இவரிடம் நான் ஐந்து ஆண்டுகள் கற்றேன் என்பதைப் பெருமையுடன் சொல்லுகின்றேன்.'' இற்றைக்குச் சுமார் எழுபது ஆண்டுகட்குமுன் இந்தச் சுவடிச்சாலை அறிவுக் களஞ்சியமாக இருந்தது என்பதற்கு ஆதீனகர்த்தரின் கூற்றே நற்சான்றாக அமைந்துள்ளது. அச்சுக்கலை வளர்ச்சியினாலும் சமுதாயத்திலேற்பட்ட மாற்றங்களினாலும் விலைமதிக்கமுடியாத இச்சுவடிச்சாலை இன்று பொலிவிழந்துவிட்டது. சேர். பொன். இராமநாதன், அவர்களின் மருகர் கலாநிதி சு. நடேசபிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், மாவிட்டபுரம் திருவாசகத் தென்றல் சு. நவநீதகிருஷ்ணபாரதி, குருகவி. வே. மகாலிங்கசிவம் போன்ற பெருமக்கள் இச்சுவடிச்சாலை ஏடுகளை நன்கு பயன்படுத்தினர்; ஐயம் ஏற்படும்போது, இந்த ஏடுகளை ஒப்புநோக்கி ஆராய்ந்தனர். இன்று இந்த சுவடிச்சாலையின் நிலைபற்றி ஆதீனகர்த்தர் அருமறையந்தணர் பெருமகன் சு. துரைசாமிக் குருக்களின் ஏக்கத்தை அப்படியே தரலாம்.‡4


''எமது ஆதீனத்தில் சுவடிச்சாலைக்கு இப்போது மதிப்பில்லை. அச்சுக்கலை வளர்ந்தபடியால் ஏட்டுக்கும் மதிப்பில்லை. ஏட்டில் எழுதும் கலையுமே மறைகின்றது. செல்லுக்குத் தப்பியிருக்கின்ற ஏடுகளைப் பாதுகாத்து வைக்கிறேன். நான் இருக்கும் வரையும் இந்த ஏடுகள் இருக்க வேண்டும். யாராவது புத்தகக் காட்சி நடாத்துவதானால் எமது ஏட்டுச் சுவடிகளை எடுத்துச் செல்வர். திருவாசகத்தை எடுக்கலாம். நூறு பதிப்புகள் வந்துவிட்டன. பனையோலை ஏட்டை யார் தேடுவர்? எனக்கு ஏட்டை விரித்துப் படித்தாற்றான் மனம் விடியும். கந்தபுராண ஏடு மூன்று பிரதிகள் எம்மிடம் இருக்கின்றன. எழுத்தாணி ஒன்றை மிகவும் பக்குவமாகப் பேணி வைக்கின்றேன்.'' மாவை ஆதீனத்துக்குச் சொந்தமான ஏட்டுப்பிரதிகள் தனியாருக்கு மட்டும் பிரயோசனப்படவில்லை. இச்சூழலில் உள்ள ஆலயங்களில் படிப்புக் காலங்களில் இந்த சுவடிச்சாலை ஏடுகள் தாராளமாக இரவல் கொடுக்கப்பட்டன. இவ்வரிய சுவடிச்சாலை அக்காலத்திலே பலருக்கும் உதவும் பெரிய நூல்நிலையமாக விளங்கியது இப்போதைய ஆலயத் திருப்பணி வேலைகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய அமைப்பில் சுவடிச்சாலை புதுப் பொலிவுடன் விளங்குவதாக.

இந்த முயற்சிக்கு ஐங்கரன் அருள் கிட்டுவதாக. முருகப் பெருமானின் கடைக்கண் பார்வை கிடைப்பதாக. வல்லியார் வானின்று இறங்கிவந்து நல்லாசி வழங்குவாராக.

‡4 கலைக்கண் — அதே பிரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவை மூர்த்தங்கள் (4)**

# கோபுரமும் அதன் கீழ் கோயில் கொண்ட பழனியாண்டவரும்

மாவைத் திருத்தலத்தில் அமைந்துள்ள மேலைவாயிற் கோபுரமும். அதன் கீழ் கோவில் கொண்டுள்ள பழனியாண்டவனையும், முற்பக்கத்தில் நிழற்படமாகக் காண்கின்றீர்கள். ஓங்கி, உயர்ந்த மேலைவாயிற் கோபுரம், இத்திருத்தலத்திற்கு ஓர் சிறப்பையும் அழகையும் கூட்டுகிறது. 85 அடி உயரமும், ஐந்து மாடங்களும் கொண்டுள்ள கோபுரத்தில் மாவைத்தல வரலாற்றுச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

பிரதான வீதியிலமைந்த இக் 'கொண்டல் சேர் கோபுரம்' போவோரையும், வருவோரையும், மாவையுறை பெருமானை அவரை நிமிட நேரத்திற்காவது சிந்திக்கவைக்கும் சிறப்பு வாய்ந்தது. இக்கோபுரமும், இதன் கீழமைந்துள்ள தண்டாயுதபாணி கோவிலும், இம்மாவை ஆலயத்தின் சிறப்புக்கள் ஆகும். ஆலயத்தில் உறை பழனி ஆண்டவன், புதுமையும், புகழும், சக்தியும் வாய்ந்தவன். எதிர்ப் பக்கத்தில் உள்ள விக்கிரகத்தைப் பார்க்கும்போதே, அவை நன்கு புலனாகும். இத்திருவுருவில் பரம வைராக்கிய சௌந்தர்யம் மிளிர்வதைக் காணலாம்.

உலக இன்பங்கள் யாவற்றையும் துறந்தால் முத்தி பெறலாம் என்ற தத்துவத்தைப் பற்றற்ற நிலையில் நின்ற தவக் கோலத்தில் பறைசாற்றும், பாங்குதான் என்ன! இத்தத்துவச் சிறப்பை ஆலய அமைப்பிலும் காணலாம் ஆம்; முருகனை, இளைஞனாகவும், அழகனாகவும், ஆண்மைக்காரனாகவும், சர்வாங்க சுந்தரனாகவும் கீழைக்கோபுர வாயில் நின்று தரிசித்த அடியவர்கட்கு, மேலைக்கோபுர வாசலில், ஆண்டியாகவும், ஆண்டவனாகவும், முருகப் பெருமான் காட்சி கொடுக்கிறான். இப்பழனியாண்டித் திருவுருவில் இங்கு அமர்ந்துள்ள மூர்த்தியின் மனங்கவரும் முண்டிதமாம் சிரத்தழகும், திருமுக மலரழகும், தியாகத் திருக்கோல அழகும், பண்டாய நான்மறைக் கோவணமணிந்து நிற்குமழகும், ஞானியர் அகங்குளிரும் தத்துவப் பேரழகாகவும், அவர்தம் உள்ளத்தில் உறைந்திடும் உவப்பரு பேரொளியாகவும் எடுத்துக்காட்டுகின்றன.

அடியார்கள் திருவமுதாய், முற்றும் துறந்த முழு ஆண்டியாக, ஞான மதலையாய், பாலதண்டாயுதபாணியாக, இகபர சௌபாக்ய மருளும், இன்ப ஊற்றாகக் காட்சியளிக்கும், இப்பழனியாண்டவர் திருவுருவம், பலநேரம் பார்த்து பரவசம் பெறக்கூடிய மூர்த்தமாகும். இவ்வற்புத மூர்த்தி. தியானத் திருக்கோலத்திலிருந்து வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவண்ணம் அளிக்கும், வள்ளலாக, கவலை- பிணி, துன்பம் ஆகிய துயர் துடைத்து, மெஞ்ஞான இன்பம் தரும் பெருமானாகத் திகழ்வது, ஆழ்ந்த சிந்தனைக்கும். அனுபவத்திற்கும், உரியதொன்றாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தூசும் ஒருகோடி மகத்துவந் தோய் தருமே"

பண்டிதர் இ. சச்சிதானந்தன் B. A. (Hons.)

மதிக்கேன் அரசரை மாமயிலோன் பாதம் உளதென்பதால்;
மிதிக்கேன் ஒருவர் சிறுமுற்றம் வேலொன்று போதுமென்றே;
விதிக்கேன் பயமென்று செம்மாந்தேன்; வேண்டாயெனினுமினித்
துதிக்கேன் ஒரு தெய்வம் மா்வை வடிவேற் சுந்தரனே!

காசிக்குச் செல்லேன் கதிர்காமம் செல்லேன் தலந்தேடித்
தேசப் பிரயாணம் செய்திலேன்; தீர்த்தங்கள் வேறறியேன்
கூசும் திருப்பதம் தஞ்ச மென விழுந்தால் கொண்டுபற்றும்
தூசுமொரு கோடி தலத்தின் மகத்துவம் தோய்தருமே.

கூசும் வடிவேற் சுடரும் குறுநகைச் செவ்விதழும்
வாசக் கமலத்திருத்தாள் வடிவும் சதங்கையும் வண்டாடி
மூசுங் கடம்பும் விழியாரக் கண்டால் மொழி வருமோ?
பேசப் படுமோவுன் சந்நிதியில் பிள்ளைப் பெருந்தேவே.

இடங்கள் பலகோடி உண்டே இருக்க; எழில்மலரும்
தடங்கள் சதகோடி மாடிகள் சந்தனச் சூழலிலே;
உடம்பும் நுடங்க ஒருசாண் குடிலில் உனதடியில்
அடங்கிக் கிடந்தேன் முகத்தின் சுடர்காணு மாசையிலே.

நஞ்சாம் பகைக்கும் பொருள் மிடிக்கும் நாலுதிசைகளிலும்
எஞ்சாக் கவலைப் பிணிக்கும் இயலா தெனவிட்ட
நெஞ்சேறு நோய்க்கும் மருந்துகண்டேன் ஒன்று; நின்னடியில்
செஞ்சே வலனே! முருகா! வெனவோர் தியானமதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக்கந்தன் திருப்பணி அடியார்களோடு சில நேரம்

இராஜ. சண்முகரத்தினம்
செயலாளர் — மாவைக் கந்தன் ஆலய திருப்பணிச்சபை.

செந்தமிழ் தெய்வ மணங் கமழும் ஈழ வள நாட்டின் வரலாற்றுப் பெருமை, தல மகிமை, அருட்சிறப்பு பொருந்திய சிவாலயங்கள் சில என்னுட்டவர்க்கும் பொது வான புண்ணிய ஷேத்திரமாக அமைந்து பரவும் அடியவர்களுடைய பிணி தீர்க்கும் சிறந்த தலமாக மாவைக் கந்தன் ஆலயம் பல நூற்றுண்டு காலமாக அதன் கோபுரம் போல் புகழ்பெற்று விளங்குகின்றது. சோழ இளவரசி மாருதப்புரவல்லியால் நிர்மானிக்கப்பட்டு சோழ சிற்பக் கலைக்கு சான்முக ஈழத்திலும் தென்னகத் தலங்களுக்கு நிகரான அருள் பொலியும் தலமாக பல நூற்றுண்டு காலம் சிறந்து விளங்கி வருகின்றது

இத் தலத்தில் பல பாரம்பரியங்களும் வைதீக கிரியை நெறிகளும் அனுட்டிக்கப் படுவது அதன் தனிச் சிறப்புக்கு எடுத்துக் காட்டுகின்றது குமார தந்திர முறையிலான நித்திய நைமித்திய கிரியைகள் ஆராதனைகள் இவ்வாலயத்தில் அனுட்டிக் கப்படுவது போல் ஈழத்தில் வேறெங்கும் நடைபெறுவதில்லை. இவ்வாலயத்தில் சேவிப்பதற்கென மரபுமுறையில் அமைந்த இசை வேளாளர்களும் ஓதுவார்கள் இருப் பது இன்னொரு சிறப்பாகும். இத்தலத் தைச் சேர்ந்த இசை வேளாளர்களுக்கு தமிழகத்திலும் தனிச் சிறப்பாக மதிக்கப் படுவதை இன்றும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

இத்தலம் தொண்டை மண்டலத்திலிருந்து குடியேறிய தண்டிகை கனகராய முதலியார், திடவீரசிங்க முதலியார் பரம் பரையினரது அனுசரணையுடன் தில்லை மூவாயிரவரைச் சேர்ந்த பெரிய மனத்துளார் மரபைச் சேர்ந்த அந்தணர்களால் பல நூற்றுண்டு காலமாக சிறந்த முறையில் பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகின்றது.

இத்தலத்தின் புனருத்தாரண வேலைகள் பலவற்றை 1975ம் ஆண்டில் நிறுவப் பட்ட 'மாவை கந்தன் ஆலய திருப்பணி சபை'' பொறுப்பேற்றுள்ளது. எழில் மிக்க சிற்பக் கலையடங்கிய தூபி அமைப்பிலான வசந்த மண்டப கருவறை அமைப்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகின்றது. இப்பணியில் முருகன் அடியார் பலருங்கலந்து முருகன் திருவருளைப் பெற்றுய்யக் கூடியதாக 1008 சங்குகளை அடியார்களைக் கொண்டு அடித்தளத்தில் பதிப்பிப்பதற்குரிய ''சங்குஸ்தாபனம்" 20-10-76 புதன்கிழமை நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இது மாவைத் தலத்தின் தனிச்சிறப்பாகும்.

''இருக்கு மவனியாம் எண்டோள்
ஈசற்கு எழில் மாடம்
எழுபது செய்துலக மாண்ட
திருக்குலத்து வளச் சோழன்''

என்று பெரிய திருமொழிப் பாடல் போற்றப்பட்ட சோழப் பேரரசன் திருமங்கை மன்னன் மரபிலே, ஒவ்வொரு சைவ அடியார்களும் மாவைக் கந்தனுக்கு எழில்மிகு சிற்பக்கலையடங்கிய வசந்த மண்டபத் திருப்பணிக்கு போதிய நிதியும் தொண்டுகளும் புரிந்து முருகன் திருவருளைப் பெற்றுய்வதற்கு முருகன் திருப்பாலிப் பாராக. அவனருளாலே பெற்ற செல்வத்தின் ஒரு பகுதியையாவது பெருமானுடைய திருப்பணி சேர்ப்பவன் சான்றோன் என்ற இறவாப் புகழ் எய்துவான் என்ற உண்மைத் தத்துவத்தை சேக்கிழார்,

''என்றும் இன்பம் பொங்கும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவன் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெல்லாம்''

திருப்பாசுரம் அழகாக விளக்குவதை உணர்ந்து உய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ந்தது இலட்சார்ச்சனை எழுகிறது வசந்த மண்டபம்

**கலைப்பேரரசு. ஏ. ரீ. பொன்னுத்துரை பி. ஏ.**
தலைவர், சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

மாவைக் கந்தன் ஆலயத்தில், மணிக்குரலில் ஒலிக்கிறது வேத ஒலி! பக்தி வெள்ளம் வசந்த மண்டபம் முழுவதுமே பீறிட்டுப் பிரவாகிக்கிறது! குமார தந்திர விதிப்படி குமரேசப் பெருமானுக்கு குளிர்த்தியான அபிடேகம்; இலட்சார்ச்சனை! தேவலோகத்தில் நிற்கிறோமோ என்ற ஒரு தெய்வீக உணர்வு அடியவர்க்கு! கலாவல்லுநரின் நாதஸ்வர இசை எமது செவிக்கின்பம்! பண்ணும் பாடலும், தாளமும் மேளமும் பஜனையும் எம்மை பண்படுத்தி நிற்கின்றன. மனத்துள் ஊடுருவும் மந்திர உச்சாடனை தேனென இனிக்கிறது. சுகந்தம் வீசும் அஞ்சலி மலர்களின் மணம்தான் என்னே! மகழ்வுதானென்னே! அடுக்குத் தீபங்களின் அழகினைக் காண்கிறோம். ஆறு தீபங்கள் காட்டப்படும் வேளை, அரோகரா ஒலி! அற்புதக் காட்சி!! ஆறுமுகப் பெருமான் திருவடியை அடைந்தோமோ என்ற தோர்களிப்பு! அருளைப் பெறுகிறோம். பஞ்சாமிர்தம் படைத்த பல பண்டங்கள் பக்குவமாய் பக்தியுடன் உண்கிறோம். இத்தனையும் நிகழ்ந்தன கடந்த தைத்திங்களில், சைவ உலகம் கண்டறியா பெருவிழாவாய் பத்து நாட்கள் பக்தர்கள் மத்தியால் இலட்சார்ச்சனை வைபவம் அந்தணப் பெருமக்கள் ஆற்றுப்படுத்த நடந்தேறியது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வசந்த மண்டபத்தில். ஓராண்டு ஆகவில்லை. அற்புதம் நிகழ்ந்திருக்கிறது. ஆயிரத்தெட்டு சங்குகளை அடியவர்கள் வைக்க, அத்திவாரம் அமைத்து, பஞ்சமூர்த்திகட்கு மண்டபம் அமைத்திட திருவருள் பாலித்திருக்கிறது. பிராமணோத்தமர்களின் முனைப்பு, திருப்பணிச் சபையினரின் துடிப்பு, குக நேயர்களின் விருப்பு செயற்பட்டு மலர்கிறது சைவப் பெரும் பணியாக. சாதாரண ஆலயத்திலா இந்தப் பெரும்பணி? இல்லை. வரலாற்றுச் சிறப்புடைய மாவைத் திருப்பதியில் தான்.

ஈழத் திருநாட்டின் ஈடில்லா கோபுரம் எங்கு நின்று பார்த்தாலும் காணும் வகையில் அமைந்த மூலஸ்தானம். குவிந்த ஒடுங்கிய குடை போன்ற 'பிரமரந்திரம்' அமைந்த தட்டி மண்டபம், மூன்று திருவீதிகள். அதுவும் மேற்கே அகன்று கிழக்கே ஒடுங்கி வெற்றிலை வேல்வடிவிலே அமைந்த மூன்றும் தேரோடு வீதி. இரண்டாம் வீதியின் வடபுறத்தே அமைந்த வசிட்ட முனிவர் உருவை தன்னகத்தே கொண்ட அழகான பூந்தட்டம், அதன் முன்னே (போத்துக்கீசர் காலம் முதல்) நீண்டு வளர்ந்து நிமிர்ந்து நிற்கும் காஞ்சிமா, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆராதனை செய்யும் சிதம்பரம் தில்லை மூவாயிரவர் பரம்பரையைச் சேர்ந்த வேதியர்கள், உற்சவகாலங்களில் அடியவரை ஈர்த்திழுக்கும் அற்புதமான கொடித்தம்ப பூசை, நாட்டுக் கோட்டை செட்டிமார் நடாத்தி வைத்த ஷண்முகப் பெருமான் திருநடனம், பஞ்சரத உலா எல்லாமே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் பழமையை பெருமையை, தனித்துவத்தைச் சுட்டி நிற்கும் தலையாய அம்சங்கள்.

இத்தகைய ஆலயத்தின் வசந்த மண்டபம் வளமார்ந்த மண்டபமாக, கலா கூடமாக, தெய்வீக மண்டபமாக வளர, மிளிர வாரி இறைப்போம் ஆயிரமோ நூறோ, சின்னஞ்சிறு தொகையோ, எதுவுமோ இல்லையெனில் ஓடோ, செங்கல்லோ. ஏன்? சரீரத் தொண்டுகூட இருக்கிறதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நம்பணி யாது?

**பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்தி ஐயர் B. A.**

பழம்பெருமை வாய்ந்த மாவை முருகப் பெருமானின் ஆலயம் பலதுறைகளில் முன்னேற்றமடைய வேண்டுமென்று பரவலாக சைவ மக்கள் மனதில் கருத்து இருக்கிறது. இக்கருத்திற்கிணங்க செயல்படும் உரிமையும் கடமையும் யாரைச் சார்ந்தது? எப்படி அப்பணியைச் செய்வது என்பது சிந்தனைக் கெடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மாவை முருகப்பெருமானின் ஆலயத்தை சிறப்பாக அமைத்த பெரியார்கள் எதிர் காலத்தை நோக்காமல் அமைக்கவில்லை. அவர்கள் சிறிய அளவில் அமைத்திருந்தால் தரிசனம் செய்யவரும் அடியார்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாதிருந்திருக்கும். அதனால் விஸ்தாரமாகக் கட்டினார்கள். விஸ்தாரமாகக் கட்டியதால் பரிபாலனம் செய்யும்பொழுது பல கஷ்டங்கள் குறுக்கிடுகின்றன. அதனால் அடிக்கடி திருத்தவேலைகளுக்கு இடம் கொடாமல் ஸ்திரமான கட்டிடமாக அமைக்கும் நோக்குடனேயே கருங்கல் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. இத்திருப்பணி வேலைகள் ஒருவரின் வாழ்நாள் முடிவதற்குள் செய்துமுடிக்கக் கூடியதல்ல. ஆதலால் அப்பணியைத் தொடர்ந்து செய்யும்படியான பொறுப்பை ஆதீன பரிபாலன கர்த்தாக்கள் பிற்சந்ததியினரிடம் நம்பிக்கையுடன் விட்டிருக்கிறார்கள்.

ஆலயத்திருப்பணி என்பது புனிதமானதும், வாழ்வில் கிடைத்தற்கரிய பெறுபேறுமாகும். திருப்பணி செய்வித்த அரசர்களும், திருப்பணிக்கு சரீரத்தாலும், பொருள் வழங்கியும் உதவிய மெய்யடியார்கள் நற்கதி பெற்றுள்ளனர் எனப் புராணங்கள் கூறுகின்றன. நாம் நமக்கெனத் தேடும் பொருள் நமக்குப் பயன் தருவதில்லை. நம் சமயத்துக்கோ பயன் தருவதில்லை. நம் சமூகத்துக்கோ பயன் தருவதில்லை. இதனால்தான் பெரும் செல்வம் படைத்த பட்டினத்தடிகளும் "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்று இறைவன் தந்த உண்மை நெறிக்கிணங்க செல்வத்தைத் துறந்தார். தானம் தவம் இரண்டையும் திருவள்ளுவரும் உயர்த்திச் சொன்னார். தம் சம்பாத்தியத்தில் ஒரு பங்கு தானத்துக்காகவே ஒதுக்கும் வழக்கம் மனித சமுதாயத்திலே பழக்கமாகிவிட்டது. நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் தானம் தரும்படி வேண்டிக் கொண்டால் உதவ மறுக்க நம்மால் முடியவில்லையே!

மூலமூர்த்தியாய் விளங்கும் முருகப் பெருமான் கர்ப்பக்கிருகத்தில் எழுந்தருளியிருந்தாலும், மண்டபங்கள், பிரகாரங்கள், கோபுரங்கள், நந்தவனம், திருக்குளம், திருமடங்கள் முதலியனவும் ஆலயத்தின் அங்கங்களே. இவற்றையும் அழகாகவும், சாஸ்திரோக்தமாகவும் நிர்மானித்து புனிதமாகப் பேணவேண்டியது நம் கடனாகும். இவற்றைப் புனிதமாகப் பேணுவதற்காகவேதான் பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை அல்லது பழுதுதென்பட்ட பொழுது ''புனராவர்த்தனம்'' செய்யும்படியாக ஆகமங்கள் விதிக்கின்றன.

மாவை முருகனின் ஆலயம் விஸ்தாரமான அமைப்புக் கொண்டதால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பழுதுபார்த்து புதுப்பிக்கமுடியாத நிலையிலுள்ளது. அதனாலே திட்டமிட்டு ஒவ்வொரு அங்கம் அங்கமாக திருப்பணிகள் செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணியைச் சிறப்பாகச் செய்ய நம் முன்னோர் உபகரித்த மூலதனமும், ஆலயத்திற்கு வரும் வருமானமும் போதாமையாலேதான் சைவ மக்களிடம் நிதி திரட்டும் நிலை உருவாகியது.

மக்களிடம் நிதி திரட்டும்போது நம் பிக்கைக்குப் பாத்திரமாக அமைவதற்காக திருப்பணிச்சபை உருவாகியது. இத்திருப்பணிச் சபை கடந்த காலத்தில் நிறைவேற்றிய தொண்டுகளைக் கணித்துக்கொண்ட மக்கள் வசந்தமண்டபத் திருப்பணிக்கும், மேற்கொண்டு நடக்கவிருக்கும் திருப்பணிகளுக்கும் வாரி வழங்குவர் என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும்.

## மாவை ஆலயக் கற்றூணில் கலையழகு

**நரசிம்மமூர்த்தி**

திருமாலின் திரு அவதாரங்கள் பத்து. இவற்றிலே சிங்கமுகமும் மனித உடலும் கொண்ட நரசிம்ம அவதாரம் பயங்கர தோற்றமுடையது. பிரகலாதன் கதை நாடறிந்த கதை. தனது மகன் பிரகலாதன் நாராயணன் மேல் பக்தி செலுத்துவது கண்டு இரண்யன் அவனைத் துன்பப்படுத்த, அவன் துயர்தீர்த்து, இரண்யனை சமஹறிக்கத் திருமால் எடுத்த திருமூர்த்தம் இம்மூர்த்தம். ''பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் தொட்ட தொட்ட இடமெல்லாம் தோன்றுவான்'' எனப் பிரகலாதன் கூற, வெகுண்டெழுந்த இரண்யன் 'இந்தத் தூணில் இருக்கிறனு' என வெருவ ''தூணிலும், துரும்பிலும், நாவிலும், நயத்த சொல்லிலும், இருப்பன் எம்மிறை'' எனக் கூற இரண்யன் தூணை உதைத்து உடைக்கிறன். அப்போது இம்மூர்த்தி தோன்றிய காட்சியைச் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடல்மூலம் பார்க்கலாம்.

நசை பிறந்து இலங்கப் பொங்கி,
நன்று, நன்று, என்ன நக்கு
விசை பிறந்து உருமு வீழ்ந்தது
என்ன ஓர் தூணின், வென்றி
இசைதிறந்து அமர்ந்தகையால்
எற்றினன்; எற்றலோடும்
திசை திறந்து அண்டம் சீறிச்
சிரித்தது செங்கட்சீயம்

மேலும்,

பிளந்தது தூணும்; ஆங்கே
பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது திசைகள் எட்டும்
பகிரண்டம் முதல் மற்றும்
அளந்தது; அப்புறத்துச்செய்கை
யார்அறிந்து அறையநிற்பார்?
கிளர்ந்தது ககன முட்டை
கிழிந்தது, கீழும் மேலும்.

உக்கிரமாக எழுந்த சிங்கமூர்த்தி. இரண்யனின் வயிரம் பாய்ந்த மார்பினைப் பிளந்து அவன் உயிரைக் குடிக்கிறர் என்று வர்ணிக்கிறர் கம்பன்.

இக்கம்ப சித்திரத்திற்கமையக் கற்சித்திரம் வடித்த சிற்பிகள் பலர். மாவை ஆலய நிர்த்தமண்டபத் தூண்களிலே இவ் அகோர நரசிம்மமூர்த்தியை கண்டு வியக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கருணைகூர் முகங்கள் ஆறு

பிரமஸ்ரீ வ. குகசர்மா

கோபம், கருணை, மகிழ்ச்சி, சோகம், ஆகிய உணர்ச்சிகளை ஒருவர் முகத்தில் இருந்தே நாம் உணர்ந்துகொள்கிறோம். "முகம் உள்ளத்தின் கண்ணாடி" என்பர் ஆன்றோர்.

கருணையே உருவமானவர் முருகப் பெருமான் "சராசரம் யாவும் காப்பான் உளஞ்செறி கருணையோடு ஒப்பிலாக் குமர மூர்த்தி இளஞ்சிறு மதலைபோல இனிது வீற்றிருந்தான் மன்னோ" என்பது கந்த புராணம். இதனாலேதான் காப்புச் செய்யுளில் "மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி" என்று பாடினார். முருகப்பெருமானுடன் யுத்தம் செய்த சூரபன்மன் தனது அசுரத்தன்மை நீங்கப்பெற்று உய்வடைந்தான் முருகப் பெருமான் யுத்தம் செய்ததும் கருணைச் செயலே என்பது இதனால் தெளிவாகிறது

தாரகாசூரன் தன்னுடன் யுத்தத்திற்கு வந்த முருகப்பெருமானை முதன் முதல் நேருக்குநேர் சந்திக்கிறான். தன்னுடைய பகைவனைச் சந்திப்பதால் ஏற்படும் கோபம் தாரகாசூரன் உளத்தில் பொங்குகின்றது. முகத்திலே கோபக்கனல் வீசுகிறது. ஆனால் முருகப்பெருமான் முகங்களோ கருணைப் பெருக்குடையனவாகவே விளங்குகின்றன. கோபத்தையோ அல்லது வெறுப்பையோ தாரகாசூரனால் அந்த முகங்களில் காண முடியவில்லை. அவர் எதிர்பார்த்ததற்கு மாறான காட்சியைக் கண்டான். "முழுமதியன்ன ஆறுமுகங்களும் முந்நான்காகும் விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்" ஆகிய அருட்காட்சியையே அவன் கண்டான்.

முருகப்பெருமான் ஆறுமுகம் கொண்டதில் பலவித தத்துவங்கள் பொதிந்திருக்கின்றன. சிவபெருமானுக்கு வேறு யாருக்குமில்லாத ஆறு குணங்கள் உண்டு. அவை ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன இந்த ஆறு குணங்களும் முருகப் பெருமானுக்கு ஆறு முகங்களாயின என்பர்.

"ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீர்
அமலற்குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய்
வந்ததென்ன"

எனக் கந்தபுராணம் கூறும். இதனையே முருகனுடைய சகஸ்ரநாமம் "ஷட்குணைசவர்ய சம்யுதாய" எனக் கூறுகிறது.

மனிதர்களுக்கு கிழத்தன்மை; இறத்தல், பசி, தாகம், சோகம், மோகம், ஆகிய ஆறு துன்பங்கள் ஏற்படுகின்றன இந்த ஆறு குற்றங்களையும் நாசஞ் செய்பவர் முருகப்பெருமான் நாசம் செய்வதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. நம் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆறு நல்ல குணங்களைக் கொடுக்கிறார். பொறுமை, தன்னையடக்கல், பற்றுநீக்கல் நடுநிலை. நம்பிக்கை, அமைதி என்பன ஆறு நல்ல குணங்களாகும். இதனால் அவர் "ஷட்வர்கதாத்ரே" என வடமொழியில் கூறப்படுகிறார்.

ஆறுமுகப் பெருமான் அடியார்களுக்கருள்புரிய ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஆறுபடை வீடுகளிலும் ஆறுவிதமான அருளைப் புரிகிறார் என்பது அருணகிரிநாதர் கருத்து. திருப்பரங்குன்றில் தெய்வயானை அம்மையாரை மணந்து உல்லாசராக இருந்து உயிர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கிறார். பிறவிப் பெருங்கடலில் தோன்றும் துன்பங்களை மாற்றி அடியார்களுக்கருள் புரிந்து அலைவீசும் செந்தூர்க் கரையில் வீற்றிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். துறவுக் கோலத்துடன் பழனியில் தோற்றி யோகநிலையை அருளுகிறார். திருவேரகத்தில் குருபரன் ஆகி உயிர்கட்கு இதம் செய்கிறார். திருத்தணிகையில் வள்ளியோடு கூடியிருந்து சல்லாபராகக் காட்சியளிக்கிறார். பழமுதிர் சோலையில் ஞான விநோதனாகக் காட்சியளிக்கிறார். இந்த உண்மையை பின்வரும் கந்தரனுபூதிப் பாட்டில் அருணகிரிநாதர் கூறுகிறார்.

''உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனு நீயலையோ
எல்லாமற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே''

ஆறுமுகப் பெருமான் உயிர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பெருமானாக விளங்குகின்றார். தேறுமுகம் இன்றி திரிந்த எமை ஆழ்வதற்கோ ஆறுமுகங் கொண்டு அவதரித்தீர் எம்பெருமான்'' என்பது கந்த புராணம் ''அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்'' எனத் திருமுருகாற்றுப்படை அடிகளும் இக்கருத்தையே கூறுவது.

முருகப் பெருமானுடைய ஆறுமுகங்களின் தொழில்களும் அதற்கேற்ப பன்னிரு கைகளின் தொழில்களின் தன்மையும் கூறப்பட்டுள்ளன. முருகப் பெருமானுடைய பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு விதமான கருணையைச் செய்கின்றன என வடமொழித் தோத்திரம் ஒன்று கூறுகின்றது. அவை ஆத்மஞானம், உண்மை பேசல், மனதை அடக்கல், வேதாந்த விசாரம், பொறாமையின்மை, அதர்மத்தில் வெறுப்பு, காலநிலை முதலிய இயற்கையால் வரும் துன்பத்தைத் தாங்குதல், புறங்கூறாமை, யாகம், தானம், பஞ்சப் புலன்களை வெல்லல், நல்லது செய்வதில் உறுதி என்பனவாகும்.

''மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் மொழிந்தும் ஒழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே''

மாவை முருகனது திருவருள் புரியும் ஆறுமுகப்பெருமானை அன்புடன் போற்றி உய்வடைவோமாக.

## மாவை ஆலயக் கற்றூணில் கலையழகு

### பிக்ஷாடன மூர்த்தம்

சிவமூர்த்தங்கள் அறுபத்துநான்கில் சிறப்புள்ள மூர்த்தம் பிக்ஷாடன மூர்த்தம். தாருகாவனத்து முனிவர்களின் அறிவு வளர்ச்சியின் விளைவில் பெற்ற ஆணவ வளர்ச்சியைத் தடுத்தாட்கொள்ள இறைவன் கபாலம் ஏந்தி பிக்ஷாடனர் உருவிலே வந்த திருக்கோலம் இம்மூர்த்தம். அழகொழுகு ஆண்மகனாக ரிஷபத்தினிகளுக்கு மனச்சபலம் உண்டாக்கவல்ல வடிவுடையோனாகக், கம்பீரமாக எழுந்து நிற்கும் இத்திருவுருவின் அழகையெல்லாம்

அடியில் தொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும், இசைமிடறுலும்
வடிவில் சிறப்ப நடந்தருளி
மூழை ஏந்தி, மருங்கு சூழ்ந்த
தொடியில் பொலி தோள் முனிமகளிர்
சுர மங்கையரை மயல் பூட்டி
படியிட்டு எழுதாப் பேரழகால்
பலிதேர் பகவன் திருவுருவம்.

என்ற பாடல் தெள்ளெனத் தெரிவிக்கிறதல்லவா? எழிலார்ந்த இத்திருவுருவும் மாவை ஆலயக் கற்றூண் சொல்லும் கலையழகில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவைக் கந்தன் ஆலயச் சிறப்பு நிலை

**மு. வயிரவப்பிள்ளை** இளைப்பாறிய ஓ. ஏ.

புண்ணிய பூமியென அறிஞர்களாற் போற்றிப் புகழப்படும் பரத கண்டத்தின் தென்பால் அமைந்துள்ளது. இலங்கையென அழைக்கப்படும் ஈழநாடு. இந்த ஈழத்திரு நாட்டின் கண்ணே திருக்கேதீச்சரம், தக்ஷிணகயிலாயமாய திருக்கோணேச்சரம், முனீச்சரம் முதலிய சிவஸ்தலங்களும். கதிர்காமம், மாவிட்டபுரம், குமாரபுரம், நல்லூர், சந்நதி, வெருகல் முதலிய சுப்பிரமணியர்ஸ் தலங்களும், மாணிக்க கங்கை, கீரிமலை 'கண்டகி' முதலிய புண்ணிய தீர்த்தங்களும், சிவனொளிபாதமலை, உகந்தமலை, தந்தசாமி மலை, நகுலகிரி முதலிய பருவதங்களும் உண்டு. யோகியர் அண்ட தரிசனத்திலே திருக்கயிலாயம் திரசுஸ்தானமாகவும், சிதம்பரம் இருதயஸ்தானமாகவும், ஈழநாடு திருவடிஸ்தானமாகவும் காண்பர். சிவனொளிபாதமலையிற் காணப்படும் பாதச் சுவடுகளும் சம்பந்தப்பட்ட கதைகளும் கருதற்பாலன.

இவ்வித சிறப்புக்களும் பலவளங்களும் பொருந்திய ஈழநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்திலுள்ளது கந்தக்கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கப்பெற்ற மாவிட்டபுரம் என்னும் சிறந்த புண்ணிய தலம். இத்தலம் முன்னர் கோயிற்கடவையென அழைக்கப்பட்டு வந்துள்ளது, சோழ மன்னன் புத்திரியாகிய மாருதப்புரவீகவல்லி தமது குதிரைமுகம் போன்ற விகாரரூபம் மாறப் பெற்றமையால் இத்தலத்துக்கு மாவிட்டபுரமென்னும் காரணப் பெயரைச் சூட்டியதுடன் கந்தக்கடவுளுக்குச் சிறந்த ஆலய மொன்றையும் நவமாயமைத்து சோழ நாட்டிலிருந்து விக்கிரகங்களையும், விதிமுறை தவறாது அர்ச்சிக்கும் சிவப்பிராமணோத்தமர் முதலானோரையும் வரவழைத்துக் கந்தக் கடவுளின் திருவருளொளியைக் கோடி சூரியப் பிரகாசமுடையதாக்கி வைத்தனள்.

இவ்வாலயம் அமைந்துள்ள ஸ்தானத்திற்கு மேற்கும் தெற்கும் மாவிட்டபுரமெனவும் கிழக்கும் வடக்கும் பழையூரெனவும் அழைக்கப்படும். செம்மட் பரப்பையுடைய மாவிட்டபுரத்தில் விசேட பயிராக வெற்றிலை பெருமளவு பயனைத் தருவதாய் உள்ளது. இத்தலத்தைச் சூழவுள்ள மற்றும் கிராமங்களிலும் மா, பலா, வாழை, தென்னை, கமுகு முதலியன கண் கவர் வனப்புடையனவாய் ஓங்கி வளர்ந்து மக்களுக்குப் பெரும் வருமானத்தைக் கொடுக்கின்றன. இச்சூழலில் வசிக்கும் மக்கள் தமக்குக் கிடைக்கும் இப் பேறெல்லாம் கந்தப் பெருமானின் கருணையாலேயாமென உணர்ந்தவர்களாய் சிவபக்தி அடியார் பக்தியிற் சிறந்து தானதருமஞ் செய்வதில் நாட்டங் கொண்டு கந்தனின் ஆலயஞ் சென்று கந்தனை வழிபாடுகளாற்றி நல் வாழ்வு வாள்கின்றனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கந்தப் பெருமானின் ஆலயம் சில ஆண்டுகளாக க்ஷீணதசை அடைந்து வந்துள்ளதென்பதை மறுப்பதற்கில்லை. இதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக இவ்வாலயம் தொன்று தொட்டு அர்ச்சகராகிய அந்தணக் குடும்பத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. வருமானப் பங்கீட்டிற் பிரச்சினைகள் உண்டாயதால் நீதிமன்றங்களிற் பெருமளவு நிதி செலவிடப்பட்டது. இஃது சிலருக்கு துவேஷ மனப்பான்மையை உண்டுபண்ணிற்று. நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் வாசல்களில் நடக்கும் அர்ச்சனைகளால் பெறப்படும் பொருள் பங்காளருக்குப்போக மிகுதி வருமானத்துடன் ஆதீனகருத்தா ஆலயத்தை நிருவகிக்க வேண்டி ஏற்பட்டது. வருமானம் பாதிக்கப்பட செலவினமும் ஏற்றமடைந்து வந்ததால் நிருவாகமோ திருப்பணி வேலை

களோ திருப்திகரமாய் நடைபெற முடிய வில்லை. இரண்டாவதாக மெய்யடியார்கள் பலர் வேதனமின்றிப் பலவித தொண்டுகள் செய்து கொண்டு ஆலயத்தில் அமர்ந்திருந்தனர். இப்போது அவ்வித தொண்டர்கள் அருகியதால் வேதனச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது. இன்றைய நிலையில் ஆலய நிர்வாகத்துக்கெனச் சுமார் 1600 ரூபா மாத வீதம் தேவைப்படுகிறது. மூன்றாவதாக, மூலஸ்தானத்திலிருந்து பரவிப் பாயும் சக்திக் கனலின் தூய்மையைப் பேணிப் பக்தர்கள் யாவருக்கும் பயன்படுமாறு விதிக்கப்பட்ட ஸ்தானங்களில் அவ்வவர் அகத்தூய்மை, புறத்தூய்மை பக்குவம் ஆகியவற்றிற்கேற்ப நின்று தொழும் ஒழுங்குச் சாதி அடிப்படையில் அர்த்தம் உண்டுபண்ணியதால் ஏற்பட்ட புயலும் ஓரளவு ஆலயச் சிறப்பைத் தாக்குவதாயிற்று.

இவற்றை உணர்ந்த ஆதீனகருத்தா அவர்கள் தமது சுகயீனத்தை முன்னிட்டு திருவாகப் பொறுப்பைத் தமது மூத்த மகன் பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களிடம் 8-10-74 அன்று கையளித்தார். தந்தையின் அநுமதிப்படி ஆலயத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள் பலவற்றை மைந்தன் எடுப்பாராயினர் திரு. ஆ. திருஞானசம்பந்தரும் திரு. ச. ஆறுமுகராசாவும் ஆற்றிய திருத்தொண்டு கருவூலமாயமைந்தது. பக்தர்கள் பலரின் ஒத்துழைப்புடனும் உற்சாகத்துடனும் ஆலய வருமானமும் வழிபாடாற்றவரும் பக்தர்களின் தொகையும் ஏற்றமடையும் வண்ணம் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் ஆலயம் தொழுகைக்கு மட்டுமல்லாது, மக்கள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குவதற்குப் பெரிதும் பயன்படுவதாயமைதல் வேண்டுமென்ற அருங்குறிக்கோளை உடையன-ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான், பண்டிதர் இ. நமசிவாயம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மா, முதலிய அறிவிற் சிறந்த மெய்யடியார்களின் சொற்பொழிவுகள் அறிவுரைகளும், பண்டிதர்கள் வே. சங்கரப்பிள்ளை. மா. குமாரசாமி ஆகியோரின் பக்திப்பாடல்கள் கூட்டுப்பிரார்த்தனைகளும், வ. குகசர்மா அவர்களின் புராண படனமும் ஆலயத்துக்கு அணி செய்து பெருந்திரளான பக்தர்களை ஈசக்கின்றன. அத்துடன் காலந் தவறாது கிரமப்படி நடக்கின்ற நித்திய நைமித்திய பூசைகள் அபிடேகங்களும், ஷண்முகார்ச்சனைகள் இலட்சார்ச்சனைகளும், கந்தப் பெருமானின் அளப்பரும் கருணையை இந்த ஸ்தலத்தில் பூரணமாய்ப் பெறக்கூடிய வாய்ப்பை உண்டு பண்ணிவிட்டது. தம்மைத் தொழும் அடியார்க்கெல்லாம் இன்னலைத் தீர்த்து இன்பத்தை வாரிவழங்குகின்றான் கந்தன் - ஆகவே இனிமேல் இவ்வாலயம் படிப்படியாக முன்னேற்றமடைந்து பழைய நிலையை எய்துமென்பது வெள்ளிடை மலை - ஆயினும் இவ்வித கருணை பாலித்து யாவரையும் வாழவைக்கின்ற தேவசேனாதிபதியாகிய எமது இறைவனின் ஆலயம் தற்போது அடைந்துள்ள நிலையைக்கண்டு மன வருத்தமடையாதாரில்லை யெனலாம் - அன்பர் கவலையைத்துடைக்கும் குமரன் இதை எவ்வளவு காலம் பொறுப்பான். ஆர்வமிக்குடைய அன்பர் சிலரை அங்கத்தினராய்க் கொண்ட ''மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிச் சபை'' என்றோர் சபை திருவருளால் 7-6-75ல் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. திருவிழாக் காலங்களிலே வள்ளி தெய்வானை சமேதரராய், விநாயகர், சிவபெருமான், உமையம்மை சூழ அன்பர்களின் காட்சிக் ககப்பட வேண்டுமென்ற பெருங் கருணையுடன் கந்தக் கடவுள் வீற்றிருந்தருளிம் வசந்த மண்டபமானது அடைந்துள்ள மோசமான நிலையை மாற்றக்கருதிய சபையினர் உள் வீதி வழியே பெருமான் உலா வரும்போது வெயில் மழையால் தாக்குறுவதைக் கண்ணுற்றனர் - முதற்கண் சீரமைக்கப்பட வேண்டியது உட் கொட்டகையே யெனக் கருதி அதைச்சீரமைத்தனர் - இப்போது வசந்த மண்டபம் நவமாயமைத்து கந்தப் பெருமானின் திருக்கோலக் காட்சியை அன்பர்கள் வாவரும் கண்டு ஆனந்திப்ப தற்காகப் பாழடைந்த பழைய கட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

249717

டத்தை சிரமதான வேலை மூலம் இடித்து 20 - 10 - 76 அன்று சங்குஸ்தாபன விழா நடத்தி வேலை ஆரம்பிக்கத் திருவருள் பாலித்துள்ளது.

இம்மண்டபம் கருணாநிதியாகிய கலியுகப் பெருமானின் பெருமைக்கேற்ப அமைக்கப்பட வேண்டியதால் நிதி பெருமளவு தேவைப்படுகிறது. சபையினர் நிதி திரட்டும் முயற்சியில் பேராவலுடன் ஈடுபட்டு வருகின்றனர். முருகப்பெருமானின் கருணையிலே விசுவாசமுடைய அன்பர்கள் யாவரும் தம்மாலியன்ற பொருளை மனமுவந்து கொடுக்கின்றனர். தம்முடைய கெட்டிக்காரத்தனத்தாலேயே பொருளைச் சம்பாதித்தோம் என்ற கருத்துடையோர் இவ்வித கங்கரியங்களுக்கு உதவப் பின்வாங்குவது இயல்பே. எமது குறுகிய இந்த வாணாளிலே இத்தகைய சிவ புண்ணியத்தை சம்பாதிக்க என்ன தவஞ் செய்தோமென்ற மனப்பான்மையுடன் உதவப்படும் நிதி பன்மடங்கு பெருக்கமுடைத்து. நிலைக்கண்ணடியில் தனது அவலட்சணத்தைக் காண்பவன் போன்று நிதி சேர்ப்பவன் புகழுக்காகவோ அல்லது சுயநலத்திற்காவோ செய்கின்றனர் என்ற ஆராய்ச்சியில் இறங்கி மீளா நரகத்திற்காளாகாது முருகனுடைய திருப்பணி நன்கு நிறைவேற வேண்டுமென்ற நற் கருத்துடன் எம்மாலியன்ற நிதி உதவுவோமானால் நாம் தப்பாது இம்மைக்கும் மறுமைக்கும் நற்பலனைச் சம்பாதித்தவர்களாவோம். நாம் உதவுவதாய நிதியும் நல்ல வழியிலேயே செலவிடப்படும் முருகனுடைய திருவருட் சித்தமும் அதுவே.

இறைகோயில் விளக்கமுறற் கேற்றபடி
எங்குலமும் முறையாக மேலோங்கி
முதன்மை பெற்று நிற்கு மென்பர்.

கந்தன் கருணை வாழி

மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிச் சபை நீடு வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாவை வளர் பிள்ளைக்கனியமுது"

பொன். சோமசுந்தரம் B. A.

## பிள்ளைத்தமிழ்

தமிழ் பெருங்குடி மக்கள் வாழ்ந்து வளர்ந்த இடமெல்லாம் தமிழ்த் தெய்வமாம் முருகப் பெருமானுக்குக் கல்லாலும், சொல்லாலும், கலையாலும், சுதையாலும் கோயிலமைத்து வழிபாடு செய்தார்கள். 'முந்து தமிழ்மாலை கோடி கோடி' புனைந்து "சந்ததமும் அவன் புகழ் பாடிப் பாடி"ப் பரவசமுற்றவர்கள் முருக பக்தர்கள். முருகன் மேல் பாடப்பட்ட பல்வேறு புகழ் பாடல்கள் வரிசையிலே, பிற்காலத் தெழுந்த பேரானந்தக் காவியம், புதுமை மிகு பிள்ளைத்தமிழ் காவியம். குழந்தையைத் தெய்வமாகக் கொண்டாடிய தமிழ் மக்கள் இப்பிள்ளை தமிழ்ப் பிரபந்தங்களிலே, தெய்வத்தைக் குழந்தையாகக் கொண்டாடிச், சீராட்டிப் பாராட்டிச் சிந்தை குளிர்ந்தார்கள். முருகப்பெருமானை, இளைஞனாக, அழகனாக, அருளாளனாக, ஆண்மைக்காரனாக, தேவசேனாதிபதியாகப் பழந்தமிழ் பாடல்களிலே பார்க்கும் நாம், இச்சிற்றிலக்கியமாகிய பிள்ளைத் தமிழிலே பிள்ளைக்கனியமுதாகப் பேசும் பொற் சித்திரமாகக், குழந்தைக் குருநாதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

குழந்தைப் பருவத்திலே, மிகமிகப் பிஞ்சுப் பருவமாகிய முதல் இருபத்தொரு மாத எல்லையைக் காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில்; சிறுபறை, சிறுதேர், எனப் பத்துப் பருவங்களாகப் பகுத்து, அவ்வப் பருவங்களிலே குழந்தையின் தோற்றம், அதன் தன்மை, அதன் செயல்கள் ஆகியவற்றையெல்லாம், தெய்வக் குழந்தைமேல் ஏற்றிப் போற்றிப் பாடும் புகழ் பாடல்கள், பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே, இச்சிற்றிலக்கியம் பல்கிப் பெருகிப் படிப்பவர் உள்ளத்தை உருகச்செய்யும் பான்மை பெற்றதாக விளங்குகிறது.

## மாவை பிள்ளைத் தமிழ்

பல்வேறு முருகத் தலங்கள்மேல் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் பாடல்களிலே மிகச் சிறந்தவை எனக் கருதப்படுபவை குமரகுருபரர் அருளிய "முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்" பகழிக்கூத்தர் பாடிய "திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்" மார்க்க சகாயதேவர் யாத்த "திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்" வேலச்சின்னோவையர் இயற்றிய "பழனி பிள்ளைத்தமிழ் ஆகியவையாகும். எளிமை, இனிமை, பொருட்செறிவு, அனுபவமாட்சி, கருத்தாளம், கற்பனை வளம், சித்தர்ந்த தத்துவச் செறிவு, ஆகியவை சிறந்த, பிள்ளைத்தமிழ் பாடல் வரிசையிலே, வைத்துப் போற்றக் கூடியது 'மாவை பிள்ளைத்தமிழ்.' தித்திக்கும் தீந்தமிழ் பாடல்களில் மாவைப் பெருமானின் அருமை, பெருமையெல்லாம் அள்ளி வழங்குகிறார் இப் பிள்ளைத்தமிழ் பாடிய பேராசிரியர், பண்டிதர் மு. கந்தையா அவர்கள். மாவை வளர் மாணிக்க வேலவன் மேல் இவர் கொண்டுள்ள ஆராத பக்தியின் சக்தியெல்லாம் இவர் பாடல்களிலே சுடர்விட்டு மிளிர்கிறது. முத்து முத்தான, செழுந்தமிழ்ச் சொற்றொடைகள், இத்தேனமுத காவியத்திற்குச் சுவையும், சோபையும், அளிக்கின்றன. மாவைக் கோபுரம் போல் ஓங்கி, உயர்ந்து கம்பீரக் காட்சியளிக்கிறது இக்கவிதைக் கோபுரம். பக்திச்சுவை, சொற்சுவை, பொருட்சுவை, வரலாற்றுச்சுவை, அனுவர்ணனைச்சுவை, ஆகிய பல்சுவை நிரம்பிய பவச்சுவை, ஆகிய பல்சுவை நிரம்பிய பாடல்கள் கற்பவர் கல்நெஞ்சைக் கனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து மாவைப் பெருமானிடம் ஈடுபடுத்தும் பான்மை உள்ளவை. இச்சிறுகாவியத்தில், மாவைக் குருநாதக் குழந்தையின் பிள்ளைப் பராயக் காட்சிகளைக் கண்டு, கண்டு அப்பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கி, முக்குளித்துத், தான் பெற்ற இப் பேரின்பம், பெறுக இவ்வையகம்' என்ற பெருநோக்குடன் அதிசய, அற்புத, அழகொழுகு தமிழ்ச் சொல் மாலை பல புனைந்து சூட்டுகிறார், ஆசிரியரவர்கள்.

தேனூறு கவிதைச் சோலையாம் இம் ''மாவைப் பிள்ளைத்தமிழ்'' சோலையிலே, புகுந்து, புகுந்து, 'ஆராய, ஆராய, தத்துவ மிகு அற்புத முருக சித்திரங்களைக் கண்டு, கண்டு களிப்பேறலாம்.

## செங்கீரை ஆடும் சிவகுமரன்

மாவைக் குழந்தை முருகன் செங்கீரையாடுகிறான். ஒரு காலை நீட்டி, மறு காலை மடக்கி, பிஞ்சுக் கையிரண்டையும் தரையில் ஊன்றி, தலையை நிமிர்த்தி, பாரமிகுதியால் முகார விந்தம், அசைய, அசைய, திருவாய்க் கடையமுத நீர் வழிந்தோடச் செங்கீரை ஆடுகிறான். ஏன் ஆடுகிறான் என்பதைச் சொல்கிறார் ஆசிரியர்.

'' ............ கோடி,
கற்பாந்த முற்றுக் கனத்துத் திணித்த நமர்
கன்மவினை கழுவி யுய்யத்
தெண்ணிலா வணியுஞ் சிவன்றரு குழவி
செங்கீரை யாடி யருளே !
தெய்வநிகழ் மாவையில் சைவ மகிழ்தேசிகா!
செங்கீரை யாடி யருளே!''

ஆம். கற்பாந்த கோடி காலமெல்லாம், எத்தனையோ பிறவி எடுத்து, எடுத்து அதன் பிரதிபலனாகிய வினையாவும் படிந்து படிந்து, செறித்து, திணிந்து, கனத்துப் போயிருக்காவா எம்மீது? அக்கன்மவினை யாவும் கழுவப்பட்டு, நாம் உய்வுபெறவே பெருமான் ஆடுகிறான் என்று கூறுவது, எவ்வளவு ஆழ்ந்த அனுபவமிகு முருகபக்தி என்று வியக்கத் தோன்றுகிறதல்லவா?

பூத்தே உலகம் புரந்து, புரந்த வண்ணம் அதனைக்காத்து நிற்கும் கருணைப் பெருவடிவாம், இறைவி, தன் செல்வ முத்துக் குமரனின் பேசரிய பெருமையெல்லாம் பேசி மகிழ்வதை.

'பேராட்டி இமையவர் பெருமாட்டி தன்னயற்
பிரியாத பெருமானொடும்
பெரும் புளகு புளகி மிகு பூராயமாகவே
பேசரிய பெருமை பேசிச்
சீராட்டி மகிழ்வுறும் செல்வமே
செங்கீரை ஆடி அருளே! '

என்று தாமும் பாடி மகிழ்கின்றார் ஆசிரியரவர்கள்.

மேலும்,
'' தெய்வறிறை சந்நிதிச்
செந்நின்று கைநீட்டித்
திருவருட் திறங்களுன்னித்
தேய மன மழியுமவர்
செங்கைக்கு எட்டும் நீ''

என்று மாவை முருகனின் அருட் திறத்தை எடுத்துக்காட்டுகிறார்

தனக்கு முன்னோடிகளாகத், தன்னை ஆற்றுப்படுத்தியவர்களையும் நன்றி மறவாது குறித்துவிடுகிறார்.

'' சொற் செட்டினுக்குட் பொருட்
கனிவு தேக்கித்
தெவிட்டாத கவிதை பொழி
தூயோன் ''

எனக் குமரகுருபர சுவாமிகளையும்

'' பாகைப் பிழிந்து பதப்படுத்திப்
படைக்கும் பிள்ளைக் கவி''

படைத்தான் எனப் பகழிக் கூத்தரையும்

'' தன்மானஞ்சால் தமிழ் புலவன்''

என நக்கீர தேவரையும் போற்றுகிறார்

## பைம் பொற் தொட்டிலில் மாவை வளர் வேலவன்

'' தண்டேன் சோலைத் தனிமாவைத்
தலைவன் ''
'' தமிழார் மாவைத் தலம் புரிந்த
தவம் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலவிதானப் பைம்பொற் தொட்டி லில் தாயர் தாலாட்ட அறிதுயில்கின் ருன். இத்தாய்மார் தான் எப்படி எப்படி தாலாட்டுகிருர்கள் பாருங்கள்.

''பைம் பொற்ருெட்டில் பக்குவிடப்
பாதமலர்கள் சிவப்பித்துப்
பதைக்குந் தாயார் பரிவுள்ளந்
தடவுங் குழவிக் கோல மருள்
தலைவா தாலோ தாலேலோ!''

என்கிருர்கள்.

''மருவுற வடியவர் மனமகிழ் குருமணி
தாலோ தாலேலோ!''
''வளர் செந்தமிழ் சேர் மாவையுமை
மகனே தாலே தாலேலோ!''

எனத் தாலாட்டுகிருர்கள்.

முருகவேள் அருணகிரிநாதருக்கு உப தேசஞ் செய்ததை

''கன்னற் தமிழும்
ஆரியக் கற்கண்டும்
கனிந்து செறிந்து இறுகிக்
கதித்த சந்த மெடுத் தெறிந்து
கன வேகத் தோடு உறப்பாய்ந்து
உன்னற் கரிதாங் கலைஞர்
உள்ளத் தோவா தூறி
உவட் டெடுத்திட் டொழுகும்
பத்தித் திருப்புகழ் சொல் உரவோன்
அண்ணல் அருணகிரி
துன்னற் கருமாதுயர் துடைத்துச்
சுத்த சொருப சித்துருவாய்
சும்மா இரு சொல் அறவென்று
துரி யாதீதப் பேறருளுந்
தன்னற கருணைத் தனக்குருவாந்
தலைவா தாலோ தாலேலோ''

என்று பாடுகிருர். முருகன் இறையனுர் அகப் பொருள்' என்ற நூலுக்கு, மதுரைச் சங்கப் புலவர் மத்தி யில் உமைப்பிள்ளையாகி புலவர் பலர் இயற்றிய உரைகளைக் கேட்டான் என்றும், அவ்வுரைகளிலே மெய்யுரையைக் கேட்ட தும் மெய்புளகங் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தான் என்றும், முருகன் தமிழ் ஆய்ந்த கதையாக வழங்குகிறது ஒருகதை, அக்கதையை ஆசிரியர்கள்

''துங்கப் பழமைத் தமிழப் புலவோர்
தூய புலமை நீராட்டிச்
சோதித் தமைந்த சொல்ல ணையிற்
றுயிற்றித் தமிழ்ச் சேய் தாலாட்டுஞ்
சங்கத் தொட்டில் தவழ்ந்தே தறித்
தகைமாண் கபிலர் பரண ரொடு
சாரு மிள நாகன் கீரன்
தகுமிவர்க்கு நடுவிருந்து
பங்கம் படராக் களவியற்காம்
பல்லோ ருரையுஞ் செவிமடுத்துப்
பட்டுற் றுணர்த்தும் மெய்ப்பாட்டிற்
பண்பா ருரையீ தெனக்காட்டித்
தங்கத் தமிழ்க்குப் புதுமையருள்
தலைவா தாலோ தாலேலோ''

என்று பாடி சங்கப் பலகையிலே கபி லர், பரணர் இளநாகன், கீரன் ஆகிய புல வர் நடுவிலிருந்து ஆய்ந்தான் எனக் காட் டுவதில், தமிழ் தெய்வமாம் முருகன் தமிழ் புலவனுகவும் காட்சியளிப்பதைக் காண லாம் அல்லவா! குழந்தை முருகன் தமி ழையே விருந்தாக உண்டுமகிழும் காட்சி யல்லவா. இக்காட்சி! ஆசிரியரின் தமிழ் பற்றை ''தங்கத் தமிழ்'' என்ற ஒரு சொல்லே விளக்குகிறதல்லவா?

## சப்பாணி கொட்டும் சண்முகக் குழந்தை

மாவைச் சண்முகநாதக் குழந்தை சப் பாணி கொட்டுகிறது. இதை ஆசிரியர் வர் ணிக்கும் அழகைப் பாருங்கள்.

''பச்சைப் பசுங்குதலை பனிமழலை
பொழிவுனுட்
பற்பாதி முத்து மொளிரப்
பொக்கம் புகாவன்பு பொலிய
வருதாயர் மகிழ்
புண்ணியப் பொலிவு தோற்றிப்
பொற்றண்டை யரைஞாண் பொலங்குழை
நலங்கொள்முடி
பத்மராகப்ப வித்ரம்
''தக்கத் தகவ்'' வெண்ணெளி சார்பிள்ளை
யமுதே
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந் சண்முக
சிவானந்த
சப்பாணி கொட்டியருளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சண்முகக் குழந்தை, ஆதிசிவன் நுதல் விழியுதித்து, ஆறு பொறிகளாகி, அக்கினி, வாயு ஆகியோரால் கங்கையில் இடப்பட்டு, கங்காதேவியின் அரவணைப்பிலே சரவணப் பொய்கை சேர்ந்து, கார்த்திகை மாதரால் பாலூட்டிச் சீராட்டப்பட்டு, உமையம்மை ஆர்வத்தோடு ஒன்று கூட்டி அணைத்த அணைப்பிலே, ஆறுமுகமும், பன்னிரு கையும் கொண்ட பரம்பொருளாய் உருவாகி, ஒன்றாய் பலவாகி உயிரனைத்தும் செவ்வியுற வளர்ந்து வரும் ஈடும் எடுப்புமில்லா அற்புதச் சிசு என்று தன் தாயர் உள்ளம் மகிழ சப்பாணி கொட்டுகிறான் என்று ஒரு பாடலில் ஆசிரியர் அமைக்கும் அழகே ஒரு தனியழகு. வெள்ளிவாரமெலாம் ஆலயக் கீழைக் கோபுர வாயிலில் முழங்கும் தேவாரம், திருப்புகழ் பண்ணிசைக்கும், இச் சண்முகக் குழந்தை சப்பாணி கொட்டியருளுகிறானும். அருணகிரிநாத சுவாமிகள் சண்முகக் குழந்தை சப்பாணி கொட்டியபோது நடந்த உற்பாதங்களை

"...... இரு நான்கு வெற்பும்
அப்பதியாய் விழ மேரு
குலுங்க விண்ணாரும் உய்யச்
சப்பாணி கொட்டிய கையா
றிரண்டுடைச் சண்முகனே!

என்று எழுதிக்காட்டுகிறார் அலங்காரத்தில். அந்த வகையிலே நம் பிள்ளைத்தமிழ் ஆசிரியரும் மாவை வளர் சண்முகக் குழந்தை சப்பாணி கொட்டியபோது பாடியதைப் பாருங்கள்.

"கோடு வியன் துடி கொட்டிட ரணபறை
கொட்டிட வெங்குமெழுங்
கோர நிசாசரர் நெஞ்ச மதிர் பறை
கொட்டிட வற்புத முற்
றுடு மகப்பதி யரிய நுதிய
ரங்கைகள் கொட்டிடவே
வசுரர் மகேந்திர புவிமுழு தவலமொ
டாவலங் கொட்டிட நேற்
சேடு மிகுந்துள சேனறிரந்துள
சிறையிணை கொட்டிட நேர்
சேனாறு மந்தரத் துந்துபி கொட்டிடச்
சிறுகையில் யிலேந்திக்

கூடுமருட் செரு வாடல் குறித்தவ
கொட்டுக சப்பாணி
கூரிலை வேல்கொடு சூர்பகை வென்றவ
கொட்டுக சப்பாணி.

சிறுகையில் வேலேந்திக் கைகொட்டிக் கைகொட்டி, இந்திராதி தேவர்கள் மகிழ, அசுரர்கள் மனத்திலே அவல மெழுப்பி, மறக் கருணைக்குக் குறிகாட்டச் சப்பாணி கொட்டுகிறார் என்று ஆசிரியர் தரும் சந்த நிறை பனுவல் படிக்கப் படிக்கத் தெவிட்டாத பாடல்.

## பாருலகம் முழுதும் புகழ் சரவணத்து முத்து

முத்தப்பருவத்தில் ஆசிரியர் தரும் அற்புதக் காட்சியொன்று!

மாலை நேரம்! முத்துச் சொரியும் கடற்கரையோரம் நண்டுகள் அங்குமிங்குமாகத் தம் வளைகளுக்குள் ஓடி ஒளிக்கின்றன. கரையோரமெல்லாம், வெண்தாளம் பூச் சொரிந்து கிடக்கின்றது. தம் கணவன் வருகைக்காக மீனவப் பெண்கள் காத்திருக்கிறார்கள். கதிரவன் குணதிசையில் தோற்றுமுன் கட்டுமரமேறிக் கடல் சென்றவர்கள் இன்னமும் வந்து சேரவில்லையே என்ற ஏக்கம் அம் மங்கையர்மேல் படிந்து கிடக்கின்றது. கீழ்த்திசையில் பேய்க்காற்று கிளம்பிவிட்ட அறிகுறி பார்த்துவிட்ட காரிகையர், ஏங்கித் தவிக்கும் இதயத்துடன் மணல்மேல் கிளறிக் கண்ணீர் முத்தஞ் சொரிய "மாவை வளர் குழந்தைப் பெருமானே, கடல் சென்ற எம்கணவர், ஒரு தீங்குமின்றிக் கரைசேர அருள்வாய்" என வேண்டிநிற்கும் மாவைவளர் முத்தான முத்தாகும் முருகக் குழந்தையை முத்தந்தர வருகவே எனப் பாடும் அருமைதான் என்னே! பாடலைப் பாருங்கள்.

"கத்துந் தரங்க மெடுத் தெறியக்
களர சேர் தாழை மடல் வெண் பூக்
கையேற்றணைக்கு மரவணைப்பின்
கவல் தீர்ந்தமர்ந்து வயிறுளைந்த
கத்தும் நளிர்மாக் கடற்பரப்பில்
நாட்காலைக்கே பிரிந்தகன்று
நயனில் குடகாற் றெழுந்தலைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்கு மாலைப் பொழுதாயும்
மெத்துங் கவற்சி யுறத் தாழ்ந்து
மீளா வன்பர் தமை நினைந்து
விரலாற் கிளைத்து மணலுளரு
மென்மா மடவார் மழைக் கண்ணும்
முத்தங் கொழிக்கும் மாவை தொழும்
முதல்வா முத்தந் தருகவே
மும்மைத் தமிழ்சேர் மாவைவளர்
முருகா முத்தந் தருகவே!''

மாவை வளர் அறுமா முகவனை வேறொரு பாடலில் முத்தம் தர வழைக்கும் பாங்கினைப் பாருங்கள்.

அடியவர்கள் உள்ளத் தொடுங்கிய அறுமா்முகக் குழந்தையை முத்தம் தர அழைக்க வந்த ஆசிரியர் அவன் அங்க லட்சணங்களை வர்ணிக்கிறார் பாருங்கள். மாவைச் சண்முகனின் ஆறு முகங்களும். ஆறு திக்குகளில் பரவி அருள் பாலிக்கிறது. அதனைப் ''பர வரு மறுமுகம்'' என்கிறார். இவ்வாறு முகநிரையுடன் நிலவும் விழிகளோ,

''அருள் பொழி பத்தோடிரண்டு விழி''
அவன் பன்னிரு தோள்களோ
''பலபல படைகளு நிலவிய வழகொழிர்
பன்னிரு திருமொய்ம்பு''
அவன் அகண்ட மார்பு
''கரவறு மனசினி லொளியுற நிலவுக
டம்பணி மணிமார்பு''
செங்கை வேலோ
''கனவினு, நனவினு, நினைவினி லுறநிகழ்
கண்கவர் சுடர் நெடுவேல்''

இத்தனையும் கொண்டவன் குருநாதன், தொண்டர் மனக் கோயிலுறை குகநாதன். அவனை,
''இரவொடு பகலறு மநுபவ நிலையின
ரிருநய குகையூடே
இளநல வெழில்தர வியல்தக ராலய
மெய்திடு பெருவாழ்வே!''
என வாழ்த்தி, வழுத்தி,

''முரவரி யெனவரு ஹரிதிரு மருகவொர்
முத்த மளித்தருளே!
முருகலர் சரவண மிசைவரு மொருமணி
முத்தம ளித்தருளே!''

என்று அவன் பவளவாய் முத்தம் வேண்டிநிற்கும் அழகே அழகு.

## திறன் மாவைத் திருவே வருக வருகவே

சிந்தா குலம் தீர்க்க வந்த உமைபாலனல்லவா முருகன். இம்மை மறுமை இரண்டிலுமே நல்லின்பம் நல்கும் நலந்திகழ் வேலவனை 'வருக வருக' என வரவேற்கும் ஆசிரியர் அற்புதமான பாடல்களை இவ் வாரானைப் பருவத்தில் வழங்குகிறார். முதற் பாடலைத்தான் பாருங்கள். எழுதா மறைக்கும் எட்டாத் தத்துவமாம், முருகனை, சதுர் மறைகள் பரவ வரும் முருகனை.

''பல்லா யிரத்துப் பல்கோடி
பழுதில் கற்பம் பாருலகிற்
பழுத்துச் செழித்த வநுபவத்தீம் பயனே!''
என்கிறார். அது மட்டுமா!

''..............பயனுர் மெய்யறிஞர்
சொல்லாலுரைக்க வாய்சோர்ந்து
சொக்கிச் சுவைத்துத் தேனிந்த
சுவையே!''
என்று முருகப் பெருமானின் தமிழ்ப் பற்றையும்

''.....................சுவை ஞானமிர்தங்
கல்லால னிழற்கீ ழறமுரைத்த
கடவுட் குரைக்குங் கலையரசே''
என்று கல்லால நிழலமர்ந்து தட்சணா மூர்த்தியாக அறமுரைத்த குரு மூர்த்தமாகிய இறைவனுக்குச் சிவகுருநாதனாய் பிரணவ முரைத்த காட்சியையும்

'கம்பத் திளைய னுய்த்தோன்றிக்
கருணை யருண கிரிக்கருளுஞ்
செல்லார் பொழில்சூ ழருணகிரிச்
சிவமே வருக வருகவே!
சிவமே விளைக்குந் திறன்மாவைத்
திருவே வருக வருகவே!

என்று அருணை முனிவருக்கு கம்பத்து இளையனாராய அண்ணாமலையில் காட்சி அளித்த சேதியையும் கூறிவைக்கிறார் ஆசிரியரவர்கள், அது மட்டுமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......... ...நகுலமுனி
விரூப முகமும் மாருதப்ர
வீக வல்லி மாமுகமும்
விலகாப் பெருநோய் விலக்குமலே
மருந்தே வருக!"
என வரலாற்றுச் செய்தியையுங் கூறி வைக்கிறார்.

"தேவா! தேவர்க் கிதம் புரிந்த
செல்வா வருக வருகவே"
"தேயம் புகழ்கோ பிற்கடவைத்
தேவே வருக வருகவே"
"தென்னம் பொழில்சூழ் மாவைவளர்
தேவே வருக வருகவே"
"கள்ளமலி கலியுகங் கண்கண்ட தெய்வமே
கந்தவே ளேவ ருகவே"
"காயுமொரு வேல்வாங்கி மயில்சேவ
லாக்கியருள்
கந்தவே ளேவருகவே"
காமேவு மாவைபிற் கருணைவடி வாகிவளர்
கந்தவே ளேவருகவே"
"கற்பமுறு மனியமுயிர் நின்கழற் காணிக்கை
கந்தவே ளேவருகவே!"

என்று வரானைப் பருவத்தில் அருமையாகவும் எளிமையாகவும் வரவேற்கிறார் மாவைப் பெருமானை.

## அழகொளிர் மாவை வளர் ஆனந்த வள்ளல்

குழந்தைக் குமரனுக்கு அம்புலி காட்டி அந்தச் சந்திரனை விளையாட வரும்படி அழைக்கிறார் ஆசிரியர். எப்படியெல்லாம் அழைக்கிறார் பாருங்கள்.

"தவநெறிப் பெருவாழ்வு சாரவரு
நம்பரன்
தன்னிக ரெனக்க ருதியோ
சந்தமலி செந்தா மரைப்பொலி
திருக்கைபுரி
சைகையா லுனைய ழைத்தான்"

என்று முருகன் சைகையால் அழைத்த காரணங் கூறி

"அவமேது மிலையெங்க ளாதிவடி வேலனுட
னம்புலீ யாட வாவே
அழகொளிர மாவைள ரானந்த வள்ளலுட
னம்புலீ யாட வாவே!"
என அம்புலியை அழைக்கிறார்.

மேலும்,
"செல்வன் குழந்தை யையன்
"சிற்பமுறு கற்பனை சிறந்தொளிர் சங்கநற்
செந்தமிழ்ப் புலவ னுமிவன்"
"எந்தையிவன் தந்தைபோ லென்றுமே
தன்பெருமை
யெண்ணாத கண்ணி யன்காண்"
"பரவுமறை முனிவர்க்கு மெட்டாப் பராபரன்"
"மாருதப் புரவல்லி மாணகுல முனியினையு
மாருத தோஷ மாற்றும்"

என்றெல்லாம் குறிப்புப் பல பேசி அம்புலியாட அழகிய சந்திரனை அழைக்கும் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது இப் பாடல்களிலே.

## சிற்றில் சிதைக்கும் சிறுகுமரன்

சின்னச் சின்ன வீடுகட்டிச் சிங்கார வீடுகட்டி சின்னச் சின்ன சிறுமியர்கள் விளையாடி மகிழ்கிறார்கள். மண்ணாலும், மரத்தாலும், குச்சாலும், குழையாலும், குடில் கட்டி, மனைகட்டி, அதில் சமையல் வேறு செய்கிறார்கள். இவர்களின் பானையோ — உடைந்த தட்டுமுட்டு. கறி வகைகள், இலை தளிர் இத்யாதி இத்யாதி...... அரிசி – கல், மண், சிப்பி, சோகி முதலியன. சமையல் முடிவுற்றதும் தம் இஷ்ட தெய்வமான மாவை முருகனுக்கு அர்ப்பணிக்கிறார்கள் தம் படையலெல்லாம். இந்த வேளையிலே ஒழித்திருந்து குழந்தைக் குமரையன் சிதைத்து அழித்து விடுகிறான் இப்படையலை. இதுதான் சிற்றில் பருவச் சாராம்சம் இச்சிற்றில் பருவப் பாடல்கள் மிக எளிமையாகவும், அழகாகவும், சுவை நிறைந்தனவாகவும் அமைந்துள்ளன. சிறுபெண்கள் சமைத்திருப்பதை ஒரு பாடலிற் காட்டுகிறார் ஆசிரியரவர்கள்.

"நனையார் தாழை மடலவிழ்ந்த
நறுஞ்சோ றின்பூங் கறிகளொடு
நறுநீர்க் குட்டத் துறுதவளை
நன்மென் சினைநீர்ப் பாயாசமும்
முனையா ரூரிக் குலமுழுது
முழுதுங் கோலம் படவமைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றந் திகழும் மணற்சிற்றில்
முதுகோ மயத்தி னணிநீவி
மனைமா சகற்றி நியமமொடு
மகமா தீர்த்தம் மகிழ்ந்தாடி
மருவும் விருந்தோ டுடனுண்ண
வருநம் மன்பர்க் கமைத்திருந்தோம்
தினையா ரமுதுண் செழுங்கருணைத்
தேவே சிற்றில் சிதையலே
தேவர் பரவும் மாவைவளர்
செல்வா சிற்றில் சிதையலே''

ஆம் அச்சிறு பெண்கள்

''முழுக் கோமயத்தினணி நீவி
மனைமா சகற்றி''

தம் விருந்தோம்பலைத் தயார் செய்திருந்தார்கள். எமது பழந்தமிழ் பண்பையும், மகாமகம் போன்ற புண்ணிய நாட்களில் பல்லோருடனுண்ணும் பக்குவத்தையும் எடுத்துக்காட்டும் நல்லதோர் கவிதை இப்பாடல். மாவை முருகன் சிறு பெண்களின் சிற்றிலை மட்டுமா, சிதைக்கின்றான்? இல்லை இல்லை, வேறுசில வேடிக்கைகளும் செய்கிறானும் தன் ஆலயத்தில்.

மாவிளக்கெடுக்கும் அடியார்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்து குவிந்துள்ளார்கள். தினையையும் சர்க்கரையையும் பிசைந்து விளக்கு வடிவமாக்கி, நெய்யிட்டு திரியிட்டு கொழுத்தி விடுகிறார்கள். அப்போது மாவை முருகையன் அவர்கள் காணாத வகையில் ஒழிந்துநின்று தன் திருவாயால் அவ்விளக்கெல்லாம் ஊதி அணைத்துவிடுகிறான். அடியார்கள் மீண்டும் மீண்டும் இவ்விளக்குகளைக் கொழுத்திவிட, மீண்டும் அவற்றை ஊதி அணைத்துவிடுகிறான். அவர்கள் அலுத்துச் சலித்துவிடும் வரை இந்நாடகத்தை நடத்துகிறானும் முருகையன். இக்காட்சியை ஒரு அழகுக் காவியமாக்குகிறார் ஆசிரியர்.

''நேய முருக நெய்யுருக்கி
நினைவு முறுகத் திரிமுறுக்கி
நேர்ந்து நிறுவி யாமன்று
நிறைமா விளக்கிற் சுடர்கொளுவ
மாய மொடுபின் மறைந்துமணி
வாயா லூதிப் பலகாலும்
மருவுஞ் சுடர்நீ யணைத்தணைத்து
மாறி மாறிக் கொளுத்திக்கை
யோயும் படிசெய் குறும்பெனைத்து
முன்றாய்க் கெனினும் புகன்றேமோ
ஊரார் புகலுங் குறைமுறைக
ளொன்றே னும்யா முரைத்தோமோ
சேய வடிவேற் செழுங்கருணைத்
தேவே சிற்றில் சிதையேலே
தேவர் பரவும் மாவைவளர்
செல்வா சிற்றில் சிதையேலே''

இச்சிற்றில் பருவப் பாடல்களில்

கந்தவனப் பதியில் முருகப் பெருமான் சித்தாந்த செல்வம் நல்கினான் என்ற செய்தியும்,

செல்வச் சந்நிதியில் முருகன்
''ஞாலமறி சர்வபலப் பிரதான மூர்த்தியாய்
நம்மியாழ்ப் பாண முழுதுங்
''தேடியருள் நல்குஞ் செழுங்கருணை
மூர்த்தியாக''

உறைகின்றார் என்ற செய்தியும் பேசப் படுகின்றது.

## சிறு பறை முழக்கும் முருகக் குழந்தை

''சிறைநீர்ப் பெருங்கேணி சேர்மாவை யரசநீ
சிறுபறை முழக்கி யருளே!
சிங்கமுக னைப்பொருத துங்கவடி வேல்வீர
சிறுபறை முழக்கி யருளே!''

என்று முதற்பாடலிலேயே முழக்கி முழக்கி முழுவதிற்கும் ஓர் அதிசய ஒலி வேகம் அமைத்துக் காட்டியிருப்பது ஒரு பெருஞ்சுவை. இதோ ஒரு ஒலிநாத வெள்ளமுறு கவியை.

''முத்தமிழ் முழக்கமுற
முதுபறை முழக்கமுற
மூவுலகு முய்ய வருளும்
மூவரெம் பெருமக்கள்
மொழிசைவ நீதியொடு
மூவாத வேத நீதி
தத்தமில் முழக்குறச்
சைவஹர ஹரவொலி
தழைத்தெழு முழக்க மோங்கித்
தண்கடல் முழக்கினொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்முகில் முழக்கமுந்
தன்கீழ்ப் படுத்தி மீப்போங்
நித்தமு மொலித்துமிகு நிகர்வரிய
மாவைவளர்
நின்மலா னந்த வாழ்வே
நின்திருப் புகழ்பாடு நேயமிகு மன்பர்த
நெஞ்சுற முழங்கு முவகைத்
தித்திமி திமித்திமி தெளித்திடச் செல்வநீ
சிறைபறை முழக்கி யருளே
சிங்கமுக ஊப்பொருத துங்கவடி வேல்வீர
சிறுபறை முழக்கி யருளே.

என்று சந்தமொடு பாடித் திருப்புகழ் விருப்பொடு பாடும் அன்பர்க்குத் தெளிவு காட்டியருள வேண்டுமென்று வேண்டி நிற்கிறார் ஆசிரியரவர்கள்.

மேலும், மாவைத் திருக்கோபுரத்தை
'மாதேவர் முரசறைய மாண்புறு
சிமிந்திவெண்
வார்தூம மோங்கு மாவை''
எனக் குறிக்கிறார்.

மாவை உற்சவ காலத்தில் காணக் கூடியதான
,'கண்டகண் கவர்மலர்க் கார்த்திகைச்
சப்பறத்''தையும்
''பெருஞ்செல்வக் கூட்டத்தையும்''
''கட்டைவண் டிப்பூண்ட காளேயினை
வெருவிவெடி
வாலெடுத் தூடு பாயத்
தெண்டனிடு மடியர்குழு சிவசிவ வெடுத்துயச்''

வேண்டுவதையும் எடுத்துக் காட்டுகிறார்.

ஓர் சந்தமிகு சித்திரமாகக் காவடிக் காட்சியையுங் காட்டுகிறார் ஆசிரியர் பாருங்கள்.

''கட்டுச தங்கை கலின்கலி னெளவொளிர்
காலிணே தாளலயங்
காண விரைந்திரு கண்ணிமை துள்ளவொர்
காவடி தோளேற்றி
விட்டுவி ளங்கொளி பட்டு வணேந்தணி
மேவு மிடுப்பொடிய
மெல்ல வளேந்து சரிந்து குதித்தெழு
வித்தக வாடல்வழித்
நட்டுமி சைப்பொலி தண்ணுமை வலவர்கள்
தலேயசை வியலமுறச்
சார்வுறு ரசிக குழாமு மசைந்தொலி
தழைவுறு கரகோஷ
முட்டுமு ழக்கிடை விட்டுமு ழங்க
முழக்குக சிறுபறையே
முன்னூறு தும்பி முகத்திறை தம்பி
முழக்குக சிறுபறையே.''

என்று முழக்கியேவிடுகிறார் ஆசிரியரவர்கள்.

## சிறுதேருருட்டும் சிவ முத்தையன்

மாவை முருகக் குழவி சிறு தேருருட்டுகிறது. இது சாதாரணத் தேரல்ல! இத்தேர்

சிவத் தவப்பயனால் வரம்பெற்று, ஆயிரத் தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக ஆண்டு, அனுபவித்து, ஆணவத் திமிரேறி, அமரரைச் சிறைப்படுத்தி, அட்டகாசஞ் செய்த சூரபன்மனை எதிர்த்துப் போராடிய தேர். போராட்டத்தில் மாண்டு மடிந்துபோன லட்சோபலட்ச அசுரர்களின் குருதிவெள்ளத்தில் வழுக்கி ஓடிய தேர்,

''ஒருகோடி சிரமுருள வுருளுறு மனேமய
வுயர்தேர்''
என வர்ணிக்கிறார் ஆசிரியர்.
அதுமட்டுமா

மாவைப் பெருமான் தேரிலிவர்ந்து திருவீதி உலாப் போக எழுந்த வீதிநிறைப் புழுதியெல்லாம்

''பங்கயப் பாய லாகப்
பரிவொழுக வுருள்வுறும்
பல்லாயி ரத்தடியர்
பத்திநீள் நிரைகி டப்பத்''
முன்னேறிச் செல்லும் தேர்.

''கோதிலா வேத மோதிக்
கோலநிரை வேதியர்கள்
கும்பிட் டெழுந்துநிமிர்
குமரன்மணி முன்றி லதிரச்''
செல்லும் தேர்.

UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது,

''காண்பினிய வறுமுகக்
காட்சிதந் தணிவீதி''த்
தெருவூர வருந்தேர்''

என்றெல்லாம் இச்சிறு தேரை வர்ணிக்கும் ஆசிரியரவர்கள்

''இளமா நலந்திகழ வெழின்மாவை
வளரண்ணல்
இறுமாந்து னடிய ரடியார்
எழுமையுங் குடிவாழ வேழுலகு முய்யா
மிம்மையே யம்மை வாய்த்துன்
செழுமா பதத்துநிழல் தேனூர்ந் திருக்கவருள்
சிறுதே ருருட்டி யருளே
திருமேவு மொருமாவை வருமான்ம நாயகா
சிறுதே ருருட்டி யருளே.''

என்று பிள்ளைத்தமிழ் பாட்லையே முடித்து வைக்கிறுர். நினைந்துருகு மடியவர்க்கு பொற்பகமும், நற்பதமும், நயந்தருள மாவைவளர் அண்ணலை வேண்டி நிற்கும் ஆசிரியரவர்களின் சீலமிகு சிந்தனைக்குச் சிரந்தாழ்த்தி வணங்குவோம்.

## கொஞ்சு தமிழில் விஞ்சி நிற்கும் கோலக் குமரன்

மாவைத் தொல்பதியும், அதில் வளர்கின்ற கோலக் குமாரனும் ஆசிரியரின் அழகொழுகு அமுதத் தமிழ் சொற்களால் அலங்கரிக்கப்பட்டு நூல் முழுவதும் இழைந்தோடி கவின்பெறு காட்சியாக மிளிர்வதைக் காண்கிறேம். தமிழின் இனிமை, அதன் மென்மை, வளமான நளினம், இப் பிள்ளைத்தமிழ்க் காவியத்திற்கு பெரு மெருகூட்டுகிறது. மாவைப் பதியை அவர்

''காண்பினிய மாவை''
''மூர்த்தி தலமோடினிய தீர்த்தமுறுமாவை''
''தமிழார் மாவைத் தலம்''
''தண்டேள் சோலைத் தனிமாவை''
''மண்ணிற் கினிய மாவை''
''வளர் செந்தமிழ்சேர் மாவை''
''மும்மைத் தமிழ்சேர் மாவை''
''சிவமே விளைக்குந் இறைவன் மாவை''
''தேவர் பரவும் மாவை''
''சிறைநீர் பெருங்கேணிசேர் மாவை''
''திருமேவு மொரு மாவை''

என்பவை போன்ற முத்துமுத்தான அழகிய சொற்கோவைகளால் மாவைத் தலச்சிறப்பை கூறமுற்படும் அழகுதான் என்னே! அழகு முருகனை, தன் தேனூறு சொற் சித்திரங்களால் மேலும் அழகு படுத்தும் ஆசிரியர் இயல்பைத்தான் பாருங்கள், மாவைப் பெருமானை.

''திருமேவு மொருமாவை வருமான்ம
நயயகன்''
''செந்தாமரை பொலி திருக்கை
வேலழகன்''
''சிங்கமுகனைப் பொருதவரும் துங்க
வடிவேல் வீரன்''
''தேடியருள் நல்குஞ் செழுங்கருணை
மூர்த்தி''
''தேமலி கடம்பணி கருணை மூர்த்தி''
''அழகொளிர மாவை வளரானந்த
வள்ளல்''
''தேயம் புகழ கோவிற் கடவைத் தேவன்''
''விலகாப் பெருநோய் விலக்கும் மலை
மருந்து''
''ஞால முய்யநயந் தருளும் தேவன்''
''தேவர்க் கிதம் புரிந்த செல்வன்''
''பாருலகம் முற்றும் புகழ்
சரவணத்து முத்து''
''தோகை மயில் மீதேறும் வாகை
வடிவேலன்''
''மருவுற வடியவர் மனமகிழ குருமணி''

என்றெல்லாம், பொன்னுன, மணியான, மதுரமான் தமிழ் வார்த்தைகளால் ஆராதனை செய்யும் ஆசிரியரவர்களைத்

''தாமோதிய கல்வியு எம்மறிவும்
தாமே பெற வேலவர் நந்ததனல்
பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர்
தாமேல் நடவீர், நடவீர்.''

என்ற அருணகிரிநாதப் பெருமானின், அற்புதக் கந்தரனுபூதி, நெறிநிற்கும் செல்வர் என்று கூறலாம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

''ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீ ரடிய ரெலாம்''

திருச்சிற்றம்பலம்

ARCHIVES

LIBRARY ✱ UNIVERSITY OF JAFFNA

249717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
249717
Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org